இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 08 | திகதி : 14.06.2020 | விலை : 30.00

# அரசின் வழிமுறைக்கு அமைவாக,

## ஆலயங்களில் திருப்பலிகளையும், வழிபாடுகளையும் நடாத்த யாழ் ஆயர் அனுமதி



கொவிட் 19 வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த பங்குனி மாதம் நடுப்பகுதி முதல் நாட்டின் சகல ஆலயங்களும் பூட்டப்பட்டு வழிபாடுகள், திருப்பலிகள் நிறுத்தப்பட்டமை நீங்கள் அறிந்ததே. சகல வழிபாட்டுத்தலங்களும் எதிர்வரும் யூன் 12ம் திகதி முதல் திறக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழிபாடுகளை நடாத்த அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையிலேயே யாழ் ஆயர் இவ் அறிவிப்பை எமது மறைமாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்களுக்கு விடுத்துள்ளார்.

யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பாதுகாவலனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலே கூறியவையாவன: எதிர்வரும் 12ம் திகதி முதல் இறைமக்கள் அரசாங்கம், சுகாதாரத்துறை வழங்கி நிற்கும் அறிவுறுத்தலுக்கு அமைவாக ஆலயங்களில் திருப்பலிகள், திருவருட்சாதனக்கொண்டாட்டங்கள், வழிபாடுகள் போன்றவற்றை நடாத்த அனுமதி வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சகல இறைமக்களும் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப்பேணி ஆலயம் நுழையும்போது கைகளைக் கழுவி நுழைய வேண்டுமெனவும், அதிகூடிய எண்ணிக்கையாக நூறு பக்தர்களே ஒரே சமயத்தில் வழிபாடுகள், திருப்பலிகளில் பங்குபற்ற முடியும் எனவும் குறிப்பிட்டார்.

பங்குகளில், வலயங்கள் அல்லது அன்பியங்கள் அடிப்படையில் நாளாந்தத் திருப்பலியை ஒப்புக்கொடுக்க பங்குத்தந்தையர்களை ஊக்குவிக்கின்றேன் எனவும் இவ் அவல நிலை தீரும் வரை ஞாயிறு கடன் திருநாள் திருப்பலி வார நாள் திருப்பலி ஒன்றில் பங்குபற்றுவதன் வழியாக ஈடு செய்யமுடியும் எனவும் ஆயர் கூறினார்.

இவ் இக்கட்டான காலப்பகுதியில் பங்குமக்களின் சுகாதார நலன் கருதி பங்குத்தந்தையர்கள் அருட்பணிச் சபையினர் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு இறைமக்கள் போதிய ஆதரவை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த துயர்மிகு காலப்பகுதியில் ஆலயங்களுக்குச் செல்லமுடியாது வீடுகளிலிருந்து திருப்பலிகளில் பங்கெடுத்து ஆன்மீக வாழ்வில் தளரா விசுவாசத்துடன் வாழ்ந்த எல்லா இறைமக்களுக்கும் தமது நன்றிகளையும் இறை ஆசீரையும் கூறி நின்றார்.

கடந்த மூன்று மாதங்களாக வீடுகளிலிருந்து இறைமக்கள் திருப்பலியைக் காண பெரும் உதவி புரிந்த யாழ். முறைமாவட்டக் குருமுதல்வர், ஆயர் இல்லக்குருக்கள் மற்றும் அதனை ஒளிபரப்புச் செய்ய உதவிய யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குனர் மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்களுக்கும் ஆயர் தமது சிறப்பான நன்றிகளைக் கூறி நின்றார்.

## யாழ் பௌத்த விகாரையில் அமைந்துள்ள புத்தர் சிலை மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு

### - யாழ் கியூடெக் கரித்தாஸ் இனமத நல்லிணக்கக்குழு கண்டனம்

யாழ்.பௌத்த விகாரையில் அமைந்துள்ள புத்தர் சிலை மீது நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு யாழ். கியூடெக் இன, மத நல்லிணக்கக்குழு கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

யாழ். மக்கள் எப்போதும் இன மத நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் எல்லா மதங்களையும் மதிக்கும் பாரம்பரியமும் கொண்டவர்கள்.


அவ்வப்போது இம் மத ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும் சில தீய சக்திகள் தோன்றி மறைவதுமுண்டு. அவ்வகையில் இவ்வாரம் யாழ் விகாரையில் அமைந்துள்ள புத்தர் சிலை மீதான விசமிகளின் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன மதங்களுக்கிடையில் சக வாழ்வை உறுதி செய்யும் பல செயற்திட்டங்களை நாம் முன்னெடுத்து, சக வாழ்வோடு எந்த இன, மத, மொழிப் பிரிவினைகளும், முரண்பாடுகளும் இன்றி வாழும் சமயத்தில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டமை வருத்தத்திற்குரியது.

சமகாலத்தில் கொவிட் - 19 வைரஸ் தாக்கம் காரணமாக மத ஸ்தலங்கள் மூடப்பட்டு பிரார்த்தனைகள், வழிபாடுகள் இன்றி மக்கள் தம் ஆன்மீக வாழ்வில் பல இடர்களைச் சந்திக்கும் துயர்மிகு காலத்தில் இவ் விகாரைத் தாக்குதல் சம்பவமானது வேதனைக்குரியதாகும்.

சிறப்பாக யாழ் விகாரை பௌத்த குரு தமிழ் மக்களுடன் நல்லுறவில் வாழ்பவர். எமது யாழ் மனித முன்னேற்ற நடுநிலைய அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்று ஆசி கூறுபவர். அப்படிப்பட்ட சுபாவம் கொண்டவரின் விகாரையில் இத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றமை மிகவும் கவலையைத் தருகின்றது என யாழ். கியூடெக்கின் இன, மத நல்லிணக்கக்குழுத் தலைவர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் ஒப்பமிட்டு வெளியிட்டு வைக்கப்பட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## இலங்கைக்கான புதிய வத்திக்கான் திருத்தூதுவர் நியமனம்



இலங்கைக்கான புதிய வத்திக்கான் திருத்தூதுவராக பேரருட் திரு பிராயன் உடைக்வே (Brian Udaigwe) ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார். இவ் அறிவிப்பானது கடந்த ஜூன் மாதம் 13ம் திகதி நண்பகல் வத்திகானில் அறிவிக்கப்பட்டது.

பேரருட்திரு பிராயன் உடைக்வே அவர்கள் கமரூனில் 1964ம் ஆண்டு பிறந்தார். இவர் நைஜீரியாவில் சிறிது காலம் குருத்துவப் பணி ஆற்றிய பின் 1994ம் ஆண்டு முதல் வத்திக்கானில் பணியாற்றி திருச்சபைச் சட்டத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார். இவர் சிம்பாவே, ஐவரி கோஸ்ட், பல்கேரியா, தாய்லாந்து, ஐக்கிய இராச்சியம், போன்ற நாடுகளின் வத்திக்கான் செயலகங்களில் பணியாற்றி பெனின் ரோகோ நாட்டின் வத்திக்கான் தூதுவராகவும் பணியாற்றி வந்துள்ளார். புதிய வத்திக்கான் தூதுவரின் பணி இலங்கையில் சிறக்க பாதுகாவலன் வாழ்த்தி நிற்கின்றது.

## அ.ம.தி.கள் சபையின் புதிய யாழ் மாகாணத் தலைவர்



அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாணத்திற்கு புதிய தலைவராக அருட்பணி பெனடிற் இயூஜின் அடிகளார் தெரிவாகியுள்ளர்.

இவ் அறிவிப்பானது உரோமபுரியில் உள்ள அ.ம.தி களின் தலைவரினால் கடந்தவாரம் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய யாழ் மாகாணத் தலைவராகப் பணியாற்றும் அருட்பணி எட்வின் வசந்தராஜா அடிகளாரின் சேவைக்காலம் ஒக்டோபர் மாதம் நிறைவுறும் நிலையிலேயே புதிய மாகாணத் தலைவர் தம் புதிய பொறுப்புகளை ஏற்பார்.

## புனர்நிர்மானம் செய்யப்பட்ட பங்குப் பணிமனை ஆனையூரில் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது



ஆனையூர் பங்கில் குருக்கள் பணிமனையானது புனர்நிர்மானம் செய்யப்பட்டு கடந்த ஜீன் 6 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

உள்நாட்டு வெளிநாட்டுப் பங்கு மக்களின் நிதியுதவியில் பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாகரன் மேற்பார்வையில் மிக அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## வாக்குறுதிகள் வேண்டாம்- 13 ஆவது திருத்தச் சட்டத்தையாவது நடைமுறைப்படுத்துங்கள்

ஈழத் தமிழ் மக்களின் எழுபது ஆண்டுகால அரசியல் விடுதலைக்கான நிரந்தரத் தீர்வு 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் ஒரு தசாப்த காலம் சென்று விட்ட நிலையிலும் இதுவரை நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை. குறைந்த பட்சம் முதற்கட்டத் தீர்வு கூட அல்லது போரின் பக்க விளைவுகளுக்குக் கூட உரிய தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுமெனப் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பாராக இருந்தால் அவருடைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முடியுமெனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தெரிவித்துள்ளது. இங்கே கேள்வி என்னவென்றால், நல்லாட்சி எனக் கூறி 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம், புதிய அரசியல் யாப்புக்கான நகல் சட்டவரைபு ஒன்றைத் தயாரித்திருந்தது. அந்த நகல் வரைபுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இருப்பதாகவும் குறிப்பாக ஒற்றையாட்சிக்குள் சமஸ்டித் தீர்வு இருப்பதாகவும் தமிழ் மக்களுக்குக் கதை சொல்லப்பட்டது.

ஆனால் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் ராஜபக்ஷ அரசாங்கம் பதவியேற்றதும், அனைத்து முயற்சிகளும் கைவிடப்பட்டன. புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபைக் கொண்டு வந்த சிங்கள அரசியல் தலைவர்கள் கூட அது பற்றி வாய் திறக்கவில்லை. இவ்வாறானதொரு சூழலிலேதான் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது.

ஆகவே தேர்தல் நடைபெறவுள்ளமையினாலேயே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கள் அனைத்துத் தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன என்று கூறலாம். அது பற்றித் தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக வியாக்கியானம் செய்கின்றன. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகள் வழங்கப்படுவதும் பின்னர் அது கைவிடப்படுவதும் வழமைதான். ஆனால் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களில் முன்னுக்குப்பின் முரணான கதைகளைக் கூறி மேலும் எழுபது ஆண்டுகள் காத்திருக்கச் செய்ய வேண்டாமென்பது தமிழ் மக்களின் மன உணர்வுகளாகும்.

அந்த மன உணர்வுகளையும் போரின் வலிகளையும் தமிழ்ப் பிரதி நிதிகள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நாடாளுமன்றக் கதிரையை எட்டிப்பிடிப்பதற்காக தமிழ் இளைஞர்களுக்கு உணர்ச்சிகளைத் தூண்டும் வகையிலான பொய்யான வார்த்தைகளைக் கொட்டக் கூடாது. பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சலுகை, நிவாரண அரசியலுக்கு மக்களைப் பழக்குகின்றனர். அதாவது சலு-கைகளை வழங்கினால் தமிழ் மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று அவர்கள் நம்புகின்றனர்.

பிரதான சிங்கள அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை அவர்கள் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள். ஆகவே அவர்களினால் சலுகைகள், நிவாரணங்களை வழங்க முடியும். ஏன் குறிப்பிட்டளவு வேலை வாய்ப்புகளையும் அவர்களால் வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆகவே இதுவரைகாலமும் அசைக்க முடியாத கொள்கைப் பிடிப்போடு வாக்களித்த ஈழத்தமிழ் மக்கள். வேலை வாய்ப்புகள், சலுகைகள், நிவாரணங்கள் ஆகிய வற்றை எதிர்பார்த்து பிரதான சிங்களக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் நிலைமை எதிர்காலங்களில் உருவாகலாம். இவ்வாறானதொரு அபாயகரமான சூழலில் தமிழ்க் கட்சிகளும் மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளை வழங்கினால் என்ன நடக்கும்? வடக்குக் கிழக்குத் தாயகத்துக்கு வெளியே வாழும் ஏனைய சமூகங்களைப் போன்று தாயகத் தமிழ் மக்கள் ஒருபோதும் சலு-கைகள், நிவாரணங்களுக்கு அடிமைப்பட்டு வாக்களித்தவர்கள் அல்ல. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழல் அவ்வாறானதொரு ஆபத்தான நிலை தோற்றம் பெறுவதை அவதானிக்க முடிகிறது.

இனப்பிரச்சினைக்கு மாகாண சபைமுறை தீர்வு அல்ல. ஆனாலும் குறைந்தபட்சம் அந்த மாகாண சபைத் தேர்தல்களை ஏன் நடத்தவில்லை என்று கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கலாம். ஜெனீவா மனித உரிமைச் சபையின் 2015 ஆம் ஆண்டு 30-1 தீர்மானத்தில் கூட மாகாண சபைகள் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.


ஆனால் இதுவரைக்கும் எவரும் இந்த விடயம் தொடர்பாக ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. தேர்தலில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றன. வெற்றிபெற்றதும் அரசியல் தீர்வை முன்வைப்போம் என்று கூறுகின்ற பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட மாகாண சபைகளுக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துவது பற்றி வாய்திறக்கவில்லை.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# துயர் பகிர்கின்றோம்



அருட்தந்தை எம்.எம். மார்சல் இராஜநாயகம் அடிகளார் கடந்த 26.04.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். பதுளை மறைமாவட்டக் குருமுதல்வராகவும், பதுளை பேராலய பங்குத்தந்தையாகவும் பணியாற்றி வருகையில் நோய்வாய்ப் பட்டு பதுளையில் காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பதுளையில் நடைபெற்றது. அடிகளார் மிருசு வில் பங்கைச் சார்ந்தவராவார். அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோமாக.



அருட்தந்தை இருதயநாதன் பேதுருப்பிள்ளை அடிக-ளார் கடந்த 30.05.2020 அன்று நோர்வே பிறடிக்சட் என்னும் இடத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் தாளையடிப் பங்கைச் சார்ந்த அமலமரித் தியாகியாவார். இவரது உடலம் நோர்வேயில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோமாக.



அருட்தந்தை பேதுரு அருள்நாதன் (அ.ம.தி) அடிக-ளார் கடந்த 18.03.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது உடலம் கொழும்புத்துறை புனித இயூஜின் டி மசனொட் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டு 18.03.2020 புதன்கிழமை அன்று யாழ் ஆயர் தலைமையில் நடைபெற்ற கூட்டுத்திருப்பலியின் பின் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோமாக.

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் புனித மரியன்னை பேராலய உதவிப் பங்குத் தந்தையுமாகிய **அருட்பணி ஜெராட் அடிகளாரின் தந்தை திரு. அந்திரேசு மருசலீன்** அவர்கள் கடந்த 20.03.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப் பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ் மறைமாவட்ட அருட்பணியாளரும் உரும்பிராய் பங்குதந்தையுமாகிய **அருட்பணி அருட்செல்வன் அடிகளாரின் தந்தை திரு. பிரகாசம் சிலுவைராசா** அவர்கள் கடந்த 06.04. 2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்க ளுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

பாதுகாவலன் குடும்பம்.

## கிறிஸ்துவின் தூய்மைமிகு உடல் மற்றும் இரத்தப் பெருவிழாவையொட்டித் திருத்தந்தையின் செய்தி

இஞ் ஞாயிறு சிறப்பிக்கப்படும் கிறிஸ்துவின் தூய்மைமிகு உடல் மற்றும் இரத்தப் பெருவிழாவையொட்டித் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'ஆண்டவரின் உடல்' என்று பொருள்படும் ஹோபஸ் டொமினி என்ற 'ஹாஷ்டாக்'குடன் செய்தியை வெளி யிட்டுள்ளார்.

"இயேசு, பாவிகளை வரவேற்று, அவர்களோடு உண்கிறார். இதுவே நம் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு திருப்பலி யிலும், ஒவ்வொரு ஆலயத்திலும் நிகழ் கிறது. இயேசு தன் விருந்துக்கு நம்மை வரவேற்பதில் மகிழ்கிறார். அங்கு அவர் தன்னையே நமக்காக வழங்குகிறார்" என்ற சொற்கள் திருத்தந்தையின் செய்தி யில் பதிவாகியிருந்தன."

## அமெரிக்க ஐக்கிய நாட்டில் போராடுகின்றவர்களுடன் ஒருமைப்பாடு

ஆபிரிக்க-அமெரிக்கரான ஜார்ஜ் பிளாய்ட் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் கொலை யுண்டதையடுத்து நீதிகேட்டுப் போராடுகின்றவர் களுடன் தனது ஒருமைப்பாட்டுணர்வைத் தெரி வித்துள்ளார் திருப்பீட உயர் அதிகாரி ஒருவர்.

பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு திருப்பீட அவையின் தலைவரான கர்தினால் கெவின் பெரல் அவர்கள் ஜூன் 05 உரோம் சந்தா மாத்தா தேவாலயத்தில் பிளாய்ட் அவர்களின் ஆன்ம சாந்திக்காகத் திருவழிபாடு ஒன்றை தலைமையேற்று நிறைவேற்றியபோது இவ்வாறு கூறினார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த கர்தினால் கெவின் பெரல் அவர்கள் அந்தத் திருவழிபாட்டில் மறையுரையாற்றிய வேளை யில் தங்கள் நாட்டின் உண்மையான கருத்தியல்கள் அதன் அரசியலமைப்பு மற்றும் அதன் சட்டங்களுக்கு குடிமக்கள் திரும்பி வருவதற்கு, கிறிஸ்தவர்கள் உதவவேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றனர் என்று கூறினார்.

கத்தோலிக்கத் திருஅவை இனப்பாகுபாட்டு விவகாரத்திற்கு பதிலளிக்கையில் கருத்தியல் களின்படி பிரிந்து நிற்காமல் கிறிஸ்தவில் ஒன்றிணையவேண்டும் என்று வலியுறுத்திய கர்தினால் கெவின் பெரல் அவர்கள் திருஅவை நற்செய்தியின் திருச்சொற்களை முழக்கமிடும் போது, அது இயேசுவுக்குப் பிரமாணிக்கமாக இருக்க விரும்புகிறது என்று கூறினார்.

சூறையாடுதலும், வன்முறையும் வருங் காலத்திற்கு எவ்விதத்திலும் பலனளிக்காது என்றும், இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவர் கள் அச்சத்தினால் மறைந்து வாழக்கூடாது என்றும் கூறிய கர்தினால் கெவின் பெரல் அவர் கள், சமுதாயத்தில் பதட்டநிலைகள் நிலவும் இன்னல் நிறைந்த இந்நேரத்தில் கிறிஸ்தவர் கள் அவ்விடங்களில் பிரசன்னமாக இருந்து, அனைவரின் இதயமும் ஏங்குகின்ற உண்மை, சமத்துவம், நன்மதிப்பு, நீதி மற்றும் நீடித்த நன்மைதரக்கூடிய விடயங்களை எடுத்துரைக்க

# ஒரு திசைகாட்டி மரத்தின் விரல்கள்

**எம் ஆயர் : சில பதிவுகள்**



சரித்திரத்தைப் படிப்பவனுக்கும் சரித்திரத்தைப் படைப்பவனுக்குமிடையில் பெரும் இடைவெளி இருக்கத்தானே செய்கிறது. இலைகளும் கிளைகளும் தானே சத்தம் செய்கின்றன. வேர்கள் மௌனமாகவே இருக்கின்றன. ஆழமான மனிதர்களை அடையாளப் படுத்துவதாய். இன்று யாரெல்லாம் புத்தகங்களை நோக்கித் தலைகுனிகிறார்களோ அவர்கள் நாளை உலகங்களின் உச்சிகளிலே உட்கார்ந்திருப்பார்கள். ஏதோ ஓர் மழைநாளில் தூவானம் பட்டுக் கூதல் விறைக்கும் யன்னலோரத்திலோ, நிலாக்காயும் என் வீட்டுத் திண்ணையிலோ, மௌனங்கள் சிதறிக்கிடக்கும் நூலக மேசையிலோ இந்த வார்த்தைகளை கண்கள் உறுஞ்சிக்குடிக்கும் தருணங்களிலெல்லாம் அந்த முகம் ஒரு மின்னல் வெட்டாய் வந்துபோகும். அது எம் யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை என்ற ஆளுமை. "அன்னை மரி வழி இயேசுவிடம்" தன் மந்தைகளைப் பசுமையான புல்வெளிகள் நோக்கி அழைத்துச் செல்லும் எம் ஆயர், பாசத்தாய் தூய பற்றிமா அன்னையின் விழா நாளில் பிறந்தது மிகப் பொருத்தம்.

தினம் தினம் பெரும் மாற்றங்களோடு திசைகள் தோறும் பிரவாகம் எடுத்து, கரைகள் உடைத்துப் பாயும் மானிடத்தின், நகர்வின் சந்திகளில் ஒரு திசைகாட்டி மரமாக நின்றுகொண்டு, வரலாறு நடந்துபோக வேண்டிய பாதைகளைத் தீர்மானித்துக் கொடுக்கும் தீர்க்க தரிசனப் பார்வை எம் ஆயருக்கு ஆண்டவன் கொடுத்த பெரும் வரம்.

'நான்' என்பது எப்போதும் ஆணவம் அல்ல. அது ஒரு மனிதனின்

**எம் ஆயரின் பிறந்த தினம் மே 13 ஆம் திகதியாகும். பிறந்ததினத்தை முன்னிட்டு வெளிவந்த சிறப்புக் கட்டுரை**

அடை யாளம். ஒரு மனிதனின் சுயத்தின் உயிர் துடிக்கும் புள்ளி. கூட்டத்தில் கரைந்து போதலுக்கும், பத்தோடு பதினொன்றாய் இழுபட்டுப் போதலும் எதிரான சுய பிரகடனம். முரணாய் இருப்பதற்கான தீர்மானம். இது எத்துணை முள்முடிகள் நிறைந்தது என்பதை இயேசுவின் வாழ்வே இரத்தமும் சதையுமாகப் பேசிவிடுகிறது. தன்னைத்தானே செதுக்கிச் செதுக்கி அழகான சுயம் பேணும் எம் ஆயரின் மிகத் தீவிரமான, மானிட இருப்பின் முன்மொழிவு. கரியாகப் பிறக்கிற நாம் - வைரமாவது வைராக்கியத்தால் தான்.

'நீ பிறந்தும் அழுதாய் மகனே. ஆனால் பிரபஞ்சம் மகிழ்ந்தது. உன் வாழ்க்கையை நினைத்து மற்றவர் அழ நீ மகிழ்சியோடு சாதல் வேண்டும்' என்ற சமஸ்கிருதப் பழமொழி ஒரு தலைவனின் வாழ்வில் எவ்வளவு பொருத்தமானது. பாதையில் கிடக்கும் சாணங்களால் உன் பயணங்கள் அழுக்காகி விடுவதில்லை என்பதை எம் ஆயர் விமர்சனங்களை எதிர்கொள்ளும் விதத்தில் படித்திட முடிகிறது.

இலையான்களைப் போல எப்போதும் அழுக்குகளில் மொய்த்துக் கிடக்காமல், தேனீக்களைப்போல பூக்களில் மொய்த்துக் கிடக்கும், அடர்த்தியான இறை நம்பிக்கையில் வேர்பிடித்த எம் ஆயரின் நேர் மறைச் சிந்தனை எம் மறை மாவட்டத்தை மகத்துவமான வளர்ச்சிப்பாதையில் நிலைநிறுத்துகின்றது.

சிறகு பிய்த்து விளையாடும் ஒரு குழந்தையின் மகிழ்ச்சிக்காக கவிதையைப் போல கிழிந்து போகிற வண்ணத்துப்பூச்சியைப் போல சிலுவையிலே தொங்கிய இயேசுவின் தியாகத்தில், எழிமையில், அன்பில், தற்கொடையில் எம் ஆயர் தொடர்ந்து நிறைக்கப்பட இறைவன் அருள் புரிய வேண்டி, வானம் போல காற்றுப் போல, கடல் போல எம் ஆயரின் வாழ்வு நீண்டு நிலைத்திட இனிய பிறந்த தினமதில் இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

**அருட்பணி.சி.அஜந்தன்.**

## சறா ஒரு சரித்திர நாயகன்


அந்த நாட்களை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. திரும்பும் திசையெல்லாம் மரண ஓலங்கள், பார்க்கும் இடமெல்லாம் உயிரற்ற உடல்கள், காண் போரெல்லாம் அங்கவீனர்களாக கையிழந்து, காலிழந்து, முகமிழந்து, சொல்ல முடியாத வேதனையின் கொடுமுடிக்குள்ளே வெந்துபோன மக்கள். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது. பயங்கரம் நிறைந்த ஒரு பிரதேசத்திலே, ஷெல் மழையினாலே நனைத்து கொண்டிருந்த இரத்த வெள்ளத்திலே மிதந்த மக்கள் திரள். இவைகளுக்கு மத்தியிலே பணியாற்ற நினைத்த ஒரு சில உள்ளங்கள் மத்தியிலே துணிவோடும், துடிப்போடும், மக்களின் துயர் நிறைந்த வாழ்வை முன்னிறுத்தி தனது பணியை இயேசுவோடு ஒப்பிட்டுப் பார்த்தவர் தான் அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன்.

நாங்கள் மாத்திரமல்ல அவரை அறிந்தவர்கள் அனைவரும் அவரை சறா என்றே அழைப்பார்கள். தனது வாழ்வு முழுவதுமே மற்றவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்கின்ற ஆர்வமும் ஆசையும் அவருக்கு சிறுவயதிலிருந்தே நிறைந்திருந்தது. பாட்சாலையிலே துடிப்பான சாரணணாக பொறுப்பு வகித்த நாள் தொடக்கம் குருமட வாழ்வு, குருத்துவ வாழ்வு என்று தனது இந்தக் குறுகிய வாழ்வு முழுவதையுமே பிறர் அன்பின் ஆழத்திலே நிலை நிறுத்தி ஏழைகளின், அனாதைகளின், துயருறுவோரின் ஏக்கச் சிலுவைகளைத் தான் சுமந்து வாழ்ந்தவர் தான் சறா.

மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது மற்றவர் நலனில் அக்கறை கொள்வர் அன்று கேள்விப் பட்டுள்ளேன். எனது வாழ்விலே இவற்றையெல்லாம் செய்து வாழ்ந்த ஒருவரைச் சந்தித்தேன் என்றால் அது சறா மட்டும் தான்.

தனக்கென்று வாழாத ஒரு தயாள உள்ளம் அவருடையது. அழுகிறவர்களை அரவணைத்து துன்பப்படுவோரின் துயர் துடைத்து, இறந்தவர்களை அடக்கம் செய்த அவர் வாழ்வை உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

வன்னிப் போரின் இறுதி நாட்களில் சறாவும் நானும் ஒரே சிறிய ஒரு அறை போன்ற ஒரு இடத்தில் இருந்தோம். நாங்கள் இருவரும் தான் அந்த இடத்தைப் பாவிப்பதுண்டு என்னுடன் கதைக்கும் ஒவ்வொரு தடவையும் மக்களின் வேதனையை, துன்பத்தைப் பற்றியே பேசுவார். இறப்புக்களை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சில குழந்தைகள்



இறந்ததைக் கண்டபோது சறா கண்ணீர் விட்டு அழுதார். எப்போதுமே அடுத்தவர் நலனில் அக்கறை கொண்ட ஒரு மனிதனை இல்லை புனிதனை நான் கண்டேன் என்பதில் எனக்கும் ஒரு திருப்தி.

இயேசு சபை அகதிப்பணியின் வன்னி இயக்குனராக இருந்து தன்னால் முடிந்த மட்டும் சேவை செய்தார் என்று மொட்டையாகச் சொல்லவே முடியாது. தனது சக்திக்கு அப்பாலும் சறா பணியாற்றினார் என்பதே உண்மையும், யதார்த்தமும், ஏனோ தெரியவில்லை சறாவிடத்திலே இனந்தெரியாத ஒரு துணிவும், துணிச்சலும் இருந்தது. அதனால் மிகப் பயங்கரமான, கஷ்டமான, உயிர் ஆபத்து நிறைந்த இடங்களுக்குக் கூட கால் நடையாகச் சென்று, மக்களைத் தேடி, நாடி, உதவிகள் செய்ததை எப்படி நாம் மறக்க முடியும?

அனைத்திற்கும் மேலாக சறாவிடத்திலே இருந்த ஒரு அசையாத சக்தி ஆண்டவன் இயேசு. ஒவ்வொரு நாளும் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். தனது பணியாவற்றையும் இயேசுவோடு நிலை நிறுத்தினார். அதனால் இறை பராமரிப்பு எப்போதுமே, எல்லா நேரத்திலேயும் சறாவோடு பயணித்தது என்பதை மன நிறைவோடு சொல்ல முடியும்.

அந்த ஆண்டவன் இயேசு தான் இவரை அழைத்தார் என்பதில் சந்தேகமே இல்லை. நன்று நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே தலைவனாகிய என்னுடைய மகிழ்ச்சியிலே பங்குகொள் என்று ஆசையோடு இயேசு அழைத்தபோது ஆம் என்ற உன் பதில் தான் உன் பணி வாழ்வின் நிறைவு சறா.

அருட்பணி பிறாயன்

## எல்லா அலெக்சாந்தர்களும் இப்படித்தான்

என்ன சொல்லுறிங்க, உங்களுக்கு இது போதுமா? இன்னும் கொஞ்சம் தரட்டுமா? ஓம் இன்னும் கொஞ்சம் இருந்தால் நல்லம். அதையும் தாங்கோ என்று தானே நாம் சொல்லுவோம். என்னிடம் எவ்வளவு தான் இருந்தாலும் அடுத்தவனிடமுள்ளதன் மீது எப்போதும் ஒரு ஏக்கம், கறையானைப் போல மனசுக்குள்ளே இருந்து கொண்டு அரித்துக்கொண்டு இருக்கிறது. எதையோ நோக்கி நாம் எப்பொதும் ஓடிக்கொண்டே தானே இருக்கிறோம்.

தேன் சுவையில் இதயம் இலயிப்பதற்கு ஆயிரம் பூஞ்சோலை களைச் சொந்தமாக்கவேண்டிய அவசியமில்லை தானே. வேலியோரம் சிலிர்த்துச் சிரிக்கும் செம்பருத்திப்பூப் போதுமே என்ற உண்மை வண்ணப்பூச்சிக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் வண்ணத்துப்பூச்சிகளின் உலகம் அழகானதாகவே இருக்கின்றது. எப்போதெல்லாம் தேவைகளைக் குறைத்துக் கொள்கிறோமோ : அப்போது சந்தோசம் அதிகமாக நிறைந்து விடுகிறது. நிம்மதி உள் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொள்கிறது. கால்களில் தீப்பிடித்த மனிதர்களாக வியர்க்க வியர்க்க படபடபுக்களோடு, நிற்க நேரமின்றித் திரிந்த நேரங்கள், ஒரு போதும் வாழ்வு வாழப்படுகிற கணங்களாக அமைவதே இல்லை. வானம் எளிமையானது. தண்ணீர் எளிமையானது. காற்று அதை ஏன் இத்தனை சிக்கல்களால் நிறைத்து விடுகிறீர்கள்?

மகா அலெக்சாந்தர் வெல்வதற்கு இந்த உலகம் போதாதே என்று கவலைப்பட்டுத் திரிந்த உலகச் சக்கரவர்த்தி அவன் இந்தியாவுக்குப் புறப்பட்டபோது டயோஜனீசைக் காணச்சென்றான். அந்தக் காலத்தில் அவர் மகா ஞானியாக திகழ்ந்தவர். அவர் மகா அலெக்சாந்தரிடம் "நீ எங்கே போகிறாய்? எதற்காக?" என்று கேட்டார். அதற்கு அவன் "நான் சின்ன ஆசியாவை வெல்லப்போகிறேன்" என்றான்.

அதை வென்றபின் என்ன செய்வாய்? என்று கேட்டார் ஞானி. 'இந்தியாவை வெல்வேன்' என்றான் அலெக்சாந்தர். 'அதற்கு பின்பு' "உலகத்தையே வெல்வேன்" அப்போது டயோஜனீஸ் ஆற்றங்கரை மணலில் நிர்வாணமாகப் படுத்திருந்தார். வெயில் காய்ந்து கொண்டிருந்தார். உலகம் முழுவதையும் வென்ற பிறகு என்ன செய்யப்போகிறாய் என்று அவர் மீண்டும் கேட்பார். "நான் அதற்குப் பிறகு நிம்மதியாக ஓய்வெடுப் பேன்" என்றான் அலெக்ஸ்சாந்தர்.

இந்தப் பதிலைக்கேட்ட ஞானி சத்தமாகச் சிரித்தார். சற்றுத் தூரத்தில் படுத்திருந்த தன் நாயைக் கூப்பிட்டார். அது அவர் அருகில் வந்து நின்றது. டயோஜனீஸ் அந்த நாயைப் பார்த்து "கேட்டாயா இவர் சொல்வதை?" உலகத்தையெல்லாம் வெற்றி கொண்ட பிறகு, இந்த மனிதர் ஓய்வெடுக்கப் போகிறாராம். இங்கே நாம் ஒரு சிறு துண்டு இடத்தைக்கூட வெல்லாமல் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றார். அலெக்சாந்தர் மனம் கேட்கவில்லை.

ஞானி சொன்னார் "நீ பாதி வழியில் திரும்பிவிடத்தான் போகிறாய். பயணம் முடிந்த பிறகு யார்தான் திரும்பி வந்திருக்கிறார்கள்.? இந்தியாவை வென்ற பின் நாடு திரும்புகையில் அலெக்சாந்தர் இறந்து போனான். கிறீசை அவன் அடைய முடியவில்லை.

உலகத்தில் இருக்கிற அத்தனையையும் அடைந்துவிட ஆசைப்படுகிற எல்லா அலெக்சாந்தர்களும் செத்துத்தான் போகிறார்கள். பாதி வழியிலேயே. அவர்கள் ஓடி ஓடிச் செல்வங்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் அவற்றை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு நேரம் அமைவதே இல்லை. அவர்கள் எல்லா இசைக் கருவிகளையும் திரட்டி விடுகிறார்கள். சரியான நேரத்தில் வாசிக்கும் சக்தியை இழந்துவிடுகிறார்கள். எல்லா வகையான உணவுப் பொருட்களையும் வாங்கி விடுகிறார்கள். உண்ண நேரம் கிடைக்கையில் நோய்ப்பட்டு உண்ண முடியாமல் போய்விடுகிறார்கள்.

சொந்தங்கள் எல்லாம் நட்சத்திரக் கூட்டம் போல சேர்ந்து சிரிக்கையில் நேரம் இல்லை என ஓடித்திரிவார்கள். இவர்களுக்கு நேரம் கிடைக்கும்போது சொந்தங்கள் யாருமே அங்கு இல்லாத வெறுங்கூட்டின் தனிமையில் மூச்சடங்கிக் கிடப்பார்கள். இறுதியில் அவர் மகள் வெறுங்கையுடன் ஒன்றுமில்லாமல் அழ ஆரம்பித்து விடுகிறார்கள். உலகையே உள்ளங் கையில் வைத்திருந்த அலெக்சாந்தரும் வெறுங்கையு டன் தானே இறந்து போனான். எல்லா அலெக்சாந்தர்களும் இப்படித்தான். ஒன்றுமே இல்லாமல்...

**அருட்பணி.சி.அஜந்தன்.**

# கொரோனா கற்றுத்தரும் பாடம்

கரவையூர் செல்வம்

**முன்னுரை**

இந்தச் சின்ன மிகச் சிறிய ஈழத்திலும் சரி பெரிய நாடுகளான சீனா, வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளாலும் சரி எல்லோர் வாயிலும் இன்று உடனடியாக வரும் சொல் ஒன்று உண்டென்றால், அது கொரோனா வைரஸ். இந்தக் கொரோனா வைரசுக்கு எவ்வளவு சக்தி உண்டு என்று எங்களைத் திகைக்க வைக் கிறது. இதுவரை சீனா, இத்தாலி போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து விட்டது. ஒரு குறுகிய காலத்தில் பல நாடுகளில் பலரின் உயிர்களை அழித்துவிட்டது. ஒரு நண்பர் சொன்னார் "இது ஆயுதம் இல்லாத மூன்றாவது உலகப் போர்" பல நாடுகளுக்குப் பரவியுள்ளது. இந்த நாடுகளில் எல்லாம் மக்கள் சாகின்றார்கள். நண்பரின் கூற்றில் உண்மை ஒன்று உண்டோ?

**மருத்துவம்**

மருத்துவர்களும் சரி, மருத்துவர்கள் அல்லாதவர்களும் சரி பல்வேறு மருந்துகளைச் சொல்கின்றார்கள். தங்களைத் தாங்களே புத்திஜீவிகள் என்று அழைக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் ஒரு மருந்தையாவது கண்டு பிடிக்காமல் விடுவார்களா? பெருங்காயத்தைக் கையில் கட்டினால் கொரோனாவை தடுத்துவிடலாம். இது யாழ்ப்பாணத் தவர்கள் கண்டு பிடித்த மருத்துவம். சும்மா கிடந்த பெருங்காயத்திற்கு பெருமதிப்பேற்பட்டு, இப்பொழுது ஒரு பெருங்காயம் 300 ரூபா வரை உயர்ந்துவிட்டது. ஒருசில நாட்களுக்கு முன்னர் இரண்டு கத்தோலிக்க அருட்சகோதரிகள் புத்தி ஜீவிகளாக உயர்ந்து சந்தைக்குச் சென்றார்கள். பெருங்காயம் வாங்குவதற்காக. ஒரு மூதாட்டி பெருங்காயம் விற்றுக் கொண்டிருந்தார். இந்த அருட்சகோதரிகள் பெருங்காயம் வாங்குவதற்காக குனிந்தபொழுது. அவர்கள் கழுத்தில் கட்டி தொங்கவிட்ட சிலுவையை அந்த மூதாட்டி பார்த்து விட்டார். அந்த மூதாட்டியும் புத்தி ஜீவியாக மாறிவிட்டார். அந்த மூதாட்டி சொன்னாராம். "சிஸ்ரர் நீங்கள் போட்டிருக்கும் அந்தச் சிலுவை இந்தப் பெருங்காயத்தை விட சக்தி வாய்ந்தது" மேற்கொண்டு இந்த நிகழ்வை ஆராய நான்விரும்பவில்லை. வாசகர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும் தானே?

**கற்றுக் கொண்டோமா?**

மனிதன்/ மனிஷி தவறுவது பொதுவான விடயம். மனித பலவீனத்தால் நாம் தவறு செய்கின்றோம். அதை நாம் தவறென ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கேட்டால் மன்னிக்கத்தான் வேண்டும். ஆனால், நான் செய்த தவறில் இருந்து எந்த ஒரு பாடத்தையும் நான் கற்றுக் கொள்ளவில்லையென்றால் அது மனிதம் அல்ல. மீண்டும் மீண்டும் அந்தத் தவறைச் செய்து கொண்டுதான் இருப்போம். முரணாக எனது தவறுகளில் இருந்து நான் ஒரு நல்ல பாடம் கற்றுக் கொண்டு அந்தப் பாடத்தை எனது வாழ்வில் உள்வாங்கி எனது வாழ்வுடன் அதை ஒருங்கிணைப்பேன் என்றால் அது ஞானத்திற்கு வழி கோலும். வாழ்க்கையில் நாம் அனுபவம் பெற்றோம் என்று சொல்வதன் அர்த்தம் அதுவே. ஆயினும் பெரும்பான்மையான மக்கள் தாங்கள் தவறுகளில் இருந்து எதையுமே கற்றுக் கொண்டு வருவதில்லை. இவர்கள், வயதில் வளர்ந்தாலும், அனுபவத்திலோ, மனிதத்திலோ வளர்வதில்லை. செய்த தவறை மீண்டும் மீண்டும் செய்து கொண்டே இருப்பார்கள். இறுதியில் செய்துவரும் தவறுக்கு அடிமையாகி விடுவதும் உண்டு. இதையே Addiction என்று அழைக்கின்றோம்.

தமிழரின் அரசியலில் ஓர் உதாரணம் மூன்று தசாப்த காலம் போரில், ஆயிரக்கணக்கான மக்களை இழந்தோம். வீடுகளை இழந்தோம், கட்டிக் காத்து வைத்த நகைகளை இழந்தோம். சொந்தக் காணிகளை இழந்தோம். சொல்லொணத் துன்பங்களை அனுபவித்து, சிலர் இன்னமும் அந்த நோவுகளை சுமந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் தமிழர் ஒன்று பட்டால்தான் எங்களுக்கு வாழ்வுண்டு என்று புத்தி ஜீவிகளும், புத்தி இல்லாத ஜீவிகளும் (அரசியல் வாதிகள்) வாய்கிழியக் கத்தி வருகின்ற நாடுகள். ஆனால் இன்றைய சமூக நிலைமையைப் பார்க்கும் பொழுது நாம் மேலும் மேலும் பிரிந்து நிற்பதையே காட்டுகின்றது. போரில் நாம் கற்றுக் கொண்டது எதுவுமே இல்லையா? பிரிவினைதான் ஈழத் தமிழரின் கலாசாரமா? அன்றேல் பண்பாடா?

**குடும்பம்**

கொரோனா வைரஸ் சில "நன்மைகளைச்" செய்துள்ளது. ஓடி ஓடி உழைத்தவர்கள். குடும்பத்தை அதிலும் குறிப்பாகத் தங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலுத்துவது அரிதாகி வந்து விட்டது. பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதும், பாடசாலையிலிருந்து வரும் பிள்ளைகளை உடனேயே "ரியூசன்" நிலையங்களுக்கு அனுப்புவதுமாகப் பெற்றோர் இருந்தார்களே ஒழிய, தங்கள் பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை. இப்பொழுது கொரோனா வைரஸ் சொல்லுகின்றது. வீட்டில் இருங்கள் பிள்ளைகளுடன் அதிக நேரத்தை செலவிடுங்கள். அவர்கள் சொல்வதற்கு செவிமடுங்கள். அவர்கள் பல சுமைகளை சுமந்து கொண்டு வாழுகின்றார்கள். அது உங்களுக்குத் தெரியாது. இப்பொழுதாவது அவர்களுக்கு செவிமடுங்கள். பிள்ளைகளில் கரிசனை செலுத்துங்கள். உங்களுக்காகவே, உங்கள் மனித வளர்ச்சிக்காகவே நாங்கள் வாழ்கின்றோம் என்று தெளிவாகச் சொல்லுங்கள். இவ்வளவு காலமும் உங்கள் சுமைகளை அறியாமல் இருந்துவிட்டோம்.அதற்காக உங்களிடமும் மன்னிப்புக் கேட்கின்றோம். இதை நான் சொல்லவில்லை. கொரோன சொல்கின்றது. கொரோனா கொடியது.

**செபம்**

கொரோனா வைரஸ் மதத் தலைவர்களையும் மாற்றிவிட்டது. இந்த நாட்டு அனைத்து மதங்களின் முகாமையாளர்களும் இன்று முதல் முறையாக சொல்லுகிறார்கள். கோவில்களைப்பூட்டி விட்டோம். ஆலயங்களைப் பூட்டிவிட்டோம். விகாரைகளுக்கு வராதீர்கள். பள்ளிவாசல் பக்கம் எட்டியும் பார்க்காதீர்கள். முரணாக வீட்டில் இருந்து செபியுங்கள். உங்களுக்காகவும், அயலவர்களுக்காகவும் உலகில் வாழும் அனைத்து மக்களுக்காகவும் செபியுங்கள். "இவ்வாறு பொதுவாகப் பேசாத மதமுகாமையாளர்களே மனம்மாறி இப்படிப் பேச ஆரம்பித்து விட்டார்களே! இந்தப் பார்வையில் பார்க்கும்பொழுது கொரோனாவிற்கு "நன்றி" கூற வேண்டும்தானே? வீடுகளில் இருந்து செபிப்பது அரிதாகி விட்டது. இல்லாமலே போய்விட்டது.

ஓடிஓடித் திரியும் மக்களுக்கு வீட்டில் இருந்து செபிக்க நேரம் இல்லை. பூசை அறைகள் இருந்த வீடுகளில் தொலைக் காட்சி அறைகள் வந்து விட்டன.நேரம் இல்லை என்று சொல்லும் அதே மக்கள் தொலைக்காட்சியின் முன் மணித்தியாலக் கணக்காக அமர்ந்திருக்கிறார்களே! சென்னையில் இருந்து ஒலிபரப்பாகும் சின்னத்திரைத் தொடர் மக்களை சிறுமைப்படுத்துகின்றது. கொரோனா சொல்லுகின்றதுசெபியுங்கள்.

கோவில்களில் கூடி கோவிந்தா போடாது, வீட்டில் இருந்து அமைதியாக அர்த்தத்தோடு செபியுங்கள். யாத்திரைகளுக்குச் சென்று அதை ஓர் உல்லாசப் பயணமாக மாற்றாமல், வீட்டில் இருந்து ஓர் சுக யாத்திரை செய்யுங்கள்.

**அக யாத்திரை**

முதலில் பாடமாக்கிய செபங்களில் மூழ்கி அர்த்தமற்று செபிக்காமல், குடும்பமாக ஓர் இடத்தில் அமைதியாக இருங்கள். மௌனமாக இருங்கள். மௌனம் என்ற சொல்லின் அர்த்தம் என்னவென்றால் சத்தமின்றி இருப்பது மட்டுமல்ல, உங்கள் குரங்கு மனங்களை மாற்றி, மௌனமாக இருக்கப் பழகுங்கள்.




இது இரவோடிரவாக வராது. ஆனால் இதையே ஒரு முக்கிய ஒழுக்கப் பயிற்சியாக, ஓர் உளப் பயிற்சியாக மாற்றுங்கள். உங்களால் முடியும். முடியும் ஒரு திடன் வேண்டும்.

அந்த மௌனத்தில் தன்னுணர்வு பெறுங்கள். உங்களை நீங்களே அறிவீர்கள். உங்கள் தன்னலம் தெளிவாகும். உங்கள் தீய பழக்க வழக்கங்கள் புரியும். இந்தத் தன்னறிவில் மனம் மாறுங்கள். கடவுள் கொரோனா மூலம் ஓர் அருமையான சந்தர்ப்பத்தை எங்களுக்குத் தந்துள்ளார். இந்த அக யாத்திரை ஞானத்திற்கு வழி இவ்வழி நடவுங்கள். நானும் நடக்கின்றேன். நீங்களும் நடவுங்கள். எங்கள் எங்கள் வீடுகளில் இருந்தவாறே யாத்திரை செய்வோம். இந்த யாத்திரையில் பயங்கரமாக வளர்ந்துவிட்ட சுய நலம் மாறும். புற யாத்திரையில் இந்த மனமாற்றம் வராது. இது வரை வந்ததில்லை. இனியும் வர வாய்ப்புமில்லை.

**சூழல்**

வீட்டில் இருந்தவாறே மரங்களைப் பாருங்கள். செடிகளைப் பாருங்கள். மலர்களைப் பாருங்கள், அவற்றின் முன் மௌனித்து இருங்கள். சூழலோடு ஒன்றித்து விடுவீர்கள். இது சூழலைப் பாதுகாக்கும். தன்னலத்தினால் பேராசை கொண்ட மனிதர்கள் சூழலைச் சுரண்டத் தொடங்கினர். சூழல் இப்பொழுது எங்களை சுரண்டுகின்றது. சூழலுடனும் வாழாது, சூழலில் இருந்து எங்களை நாம் பிரித்து விட்டோம். இந்தப் பிரிவும் பிளவுந்தான் மனித வன்செயல்களுக்கு அடிப்படைக் காரணம் என்று தோமஸ் பெரி (Thomas Bery) அவர்கள் விரிவாக எழுதியுள்ளார். அதில் உண்மை உண்டு. எமது மூதாதையர்கள் சூழலோடு வாழ்ந்தார்கள். இயல்பான உணவை உண்டார்கள். ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள், பேராசை கொண்ட வணிகர் இதை மாற்றி பணத்திற்காக சூழலோடு முரண்பட்டு நஞ்சூட்டிய மருந்துகளை பயிர்களுக்கும் பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும் அடித்தார்கள். விளைவு: இன்று பல்வேறு நோய்களுக்கு மனித இனம் அடிமைப்பட்டு விட்டது.

இது தவக்காலம். மனம் மாறுவோம். சூழலோடு ஒத்து வாழ்வோம் நோய்கள் நீங்கும். வன் செயல்கள் குறையும். ஆயுத உற்பத்தியை ஒழிப்போம், பாதுகாப்பு என்ற பெயரில் பயங்கர ஆயுத உற்பத்தி செய்து அவற்றை பெருஞ் செலவில் விற்று, நஞ்சுத் தன்மை கொண்ட இந்த ஆயுத வெடிப்பில் சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இயல்பான, சுகமான காற்றிலேயே இந்த ஆயுத நஞ்சு கலந்துவிட்டது. அதையே நாம் சுவாசிக்கின்றோம்.

**ஆய்வுகள்**

விஞ்ஞான ஆய்வுகள் அவசியம். விஞ்ஞான ஆய்வுகளில் பல நன்மைகள் மனித இனத்திற்கு சாதகமாக வந்துள்ளன. இந்த ஆய்வுகள் தொடர வேண்டும். இதில் இரு கருத்துக்கள் கிடையா. ஆனால் தேவையற்ற, முறையற்ற, மனித குலத்திற்கு ஆபத்து தரக்கூடிய ஆய்வுகளின் பக்க விளைவுகள் கொரோனா போன்ற தொற்று நோய்களை உருவாக்கி விடுகின்றன. இதிலும் இரு கருத்துக்கள் கிடையாது. ஆட்கொல்லியான கொரோனா கற்றுத்தரும் பாடங்கள், இவை. கற்றுக் கொள்வோமா? அன்றேல் கொரோனாவை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர், எங்களுள் உள்ள வேதாளம் பழையபடி முருக்கையில் ஏறுமா? பதில் எங்களிடம் உள்ளது. எங்கள் இத்தனை மாற்றத்தில் உள்ளது. எங்கள் மனமாற்றத்தில் உள்ளது.

**தவக்காலம்**

இம்முறை தவக்காலம் வேறு கோலம் பூண்டுள்ளது. இது எங்கள் நன்மைக்கே. இந்தப் புதுக் கோலம். எங்களுக்கு ஒரு பெரும் சவால். சவாலை சந்திப்போம். எங்களுக்கு நாங்களே சவால் விடுவோம். ஐயோ! தவக்காலத்தில் கோவிலுக்குப் போக முடியவில்லையே என்று முதலைக் கண்ணீர் வடிக்காதீர்கள். வீட்டில் இருந்து தவம் செய்யுங்கள். ஐயோ! பெரிய சிலுவைப் பாதை இல்லையே என்று பதறாதீர்கள். உங்களுள் நீங்களே உருவாக்கிய சிலுவைகளைப் பாருங்கள். பொறாமை, எரிச்சல், ஆவாதி, அவதூறு பேசி அயலவரின் பெயர்களைக் கொடுத்தமை, இழப்புக்களுக்கு வருந்தாமை, அநீதியோடு ஒத்துப்போனமை, தன்னலச் செயல்கள் இப்படி பலசிலுவைகள் உங்களுக்குள் உண்டு அவற்றைப் பாருங்கள். அந்த அகச் சிறைகளில் இருந்து மீட்புப் பெறுங்கள். ஐயோ, இம்முறை இயேசுவின் பாடுகளை மேடையேற்ற முடியவில்லையே என்று அங்கலாய்க்காதீர்கள்.

உங்கள் மனமென்ற மேடையில் நீங்கள் ஏந்திய பிலாத்துக்களைப் பாருங்கள். நீங்கள் செய்த தவறான தீர்ப்புக்களைப் பாருங்கள். மக்களுக்கு நன்மை செய்து நற்செய்தி சொல்லி, மக்களை பல்வேறு அடக்கு முறைகளில் இருந்து மீட்க வந்த இயேசுவை சொல்லிச் சொல்லி மக்களை ஏவினார்களே அன்றைய பெரிய குருக்கள். இந்தப் பெரிய குருக்கள் உங்களுள் உள்தெரிந்தார்கள். அவர்களைப் பாருங்கள். உங்கள் மத்தியில் தோன்றிய தீர்க்கதரிசிகளை, இறை வாக்கினர்களை ஒதுக்கினீர்களே! அந்தக் கொடிய செயல்களைப் பாருங்கள். இது தான் 2020ம் ஆண்டு தவக்காலம். தபம் செய்யுங்கள். மனம் மாறுங்கள்.

இயேசு சொன்னவற்றை நீங்கள் செய்யவில்லை. முரணாக இயேசு செய்ய வேண்டாம் என்று சொன்னவற்றைச் செய்கின்றீர்கள். இயேசுவின் வார்த்தையில் வாழ்க்கையிலும் இருந்து நாலாம் நூற்றாண்டில் இருந்து விலகி நிறுவன திருச்சபை எங்கோ சென்று விட்டது. அதனாலேயே இன்று தோன்றியுள்ள எங்கள் தீர்க்கதரிசி போப் பிரான்சிஸ் நற்செய்திக்குத் திரும்புங்கள் என்று அடிக்கடி சொல்லுகின்றார். அவர் சொன்னதை அவர் வாழ்கின்றார். வீட்டிலிருந்து நற்செய்தியை குடும்பமாகப் படியுங்கள். இயேசு உங்களுக்கு என்ன சொல்கின்றார் என்று திறந்த மனத்தோடு செவிமடுங்கள். மனம் மாறுங்கள் கொரோனா இரண்டு வரமுன்னர் மாறுவோம்.

# விவிலிய நோக்கில் கொரோனா வைரஸ்

அருட்பணி ஜீவேந்திராபோல்





கொவிட் - 19 வைரஸ் உலகெங்கும் தீவிரமாகப் பரவி பல உயிர்களைக் காவு கொண்டு உலகை முழுமையாகவே முடக்கிவிட்டது. கொரோனா தொற்று நோயினால் உலகின் அனைத்து மக்களும் அச்சத்தினாலும் இழப்பினாலும் அசௌகரியங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் பரவி வரும் நாடுகளின் பட்டியலும், பாதிக்கப்பட்டோரின் தொகையும் இறந்தோரின் எண்ணிக்கையும் நாளும் பொழுதும் மேன் மேலும் அதிகரித்துக் கொண்டு வருவது உலக சமூகத்தையே அச்சத்திற்கும், அதிர்ச்சிக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக்கிவிட்டது. கொரோனா ஓர் ஆபத்தான தொற்று நோய் என்பதினால் அதைத் தடுப்பதற்கான பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு, அரசு சார்பற்ற நல்லெண்ண அமைப்புகள் எடுத்துவருகின்றன.

**மனித நேயம் கொண்டவர் போற்றுதற்குரியவர்.**

மனிதத்தை நேசிக்கும் இம் முயற்சிகள் காலத்தின் கட்டாயமும் மிகவே போற்றுதற்குரிய செயல்களுமாகும். இவ்வாபத்து வேளையில் தியாக சிந்தையோடும் மனித நேயத்தோடும் பணியாற்றிக்கொண்டிருக்கும் நல்ல உள்ளங்களை நன்றியோடு நினைவுகூறி அவர்களுக்காக இறைவனை மன்றாடுவோம்.

"இயேசுவினுடைய காலில் முகங்குப்பற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார்." (லூக் 17:16) தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க ஆரம்பத்தில் கல்வி நிலையங்கள், உடற்பயிற்சி கூடங்கள், அருங்காட்சியகங்கள், கலாசார மற்றும் சமூக மையங்கள், தியேட்டர்கள் என்பன மூடப்பட்டன. பின்பு அனைத்து மத வழிபாட்டு மையங்களும் அங்கு இடம் பெறக் கூடிய குழும ஆராதனைகளும் நிறுத்தப்பட்டன. மேலும் பயணங்கள் தடைப்பட்டன. விமானம், பேருந்துக்கள், பொது போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டன. மக்கள் ஒன்றுகூடும் சமய, சமூக விளையாட்டு, பொழுது போக்குகள் போன்ற நிகழ்வுகள் யாவும் தள்ளி வைக்கப்பட்டன.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை**

இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று தலை தடுப்பதற்காக உலகெங்கும் "போர்க்கால அடிப்படையில்" பல நட வடிக்கைகள் மேற்கொள்வது எமது அன்றாட அனுபவமாகவுள்ளது. இவ்வனைத்து முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளும் அடிப்படையில் **தனிமைப் படுத்தல்** (Quarantine) எனும் வழி முறையைக் கொண்டதாக அமைகிறது. உலக சுகாதார அமைப்பு (WHO) **"சமூக விலகல்"** (Social Distancing) எனப்படும் பிறரை விட்டுத் தள்ளி நிற்கும் முறையை கடைப்பிடிக்க அறிவுறுத்தியுள்ளது. இருமல் தும்மல் உள்ள நபரிடமிருந்து ஒரு மீற்றர் அதாவது மூன்று அடி தூரத்தை பராமரிக்குமாறு அறிவுறுத்தப் படுகின்றனர்.

இன்று பல்வேறு தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டினால் புவியானது ஒரு கிராமமாக (Global Village) சுருங்கிவிட்டது. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாடு விட்டு நாடுகளுக்கும் கண்டம் விட்டு கண்டங்களுக்கும் பயணிக்கிறார்கள். அண்மைக் காலத்தில் நாடுகளும் குறிப்பாக வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் கூட தமது எல்லைகளைத் திறந்து மக்கள் நடமாட்டத்தை விரிவுபடுத்தி நட்புறவை வளர்த்துக்கொள்ள விரும்புகின்றனர். இவ்வாறான முன்னேற்றம் கண்ட பின் புலத்தில் சமூக விலகலும் தனிமைப்படுத்தும் முயற்சிகளும் ஒரு புரிந்துகொள்ளமுடியாத பின்னடைவைக்கொண்ட முரண்பாடாகத் தோன்றுகிறது.

தொடுதல் மூலம் பரவக் கூடிய கொரோனா வைரஸ் நோயைத் தடுக்கும் முன்னெச்சரிக்கையாக தங்கள் இல்லத்திலேயே தங்குங்கள் (Stay home) என்ற அறிவுரை தொடர்ச்சியாகப் பரிந்துரைக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட அறிவுரைகள் அடுத்திருப்பவர்களை அந்நியப்படுத்தலும் புறம்பாக்கி ஒதுக்கி வைக்கவும் கொடுக்கப்படுகின்ற ஆணை போன்று தோன்றுகின்றது. நோய்க்கான அறிகுறிகளை கொண்டவர்களும் அவர்களோடு பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு ஆதரவற்றவர்க ளாக இறந்துவிடுவார்களோ என்ற அங்கலாய்ப்பு பலரை வருத்துகின்றது. தனிமைப்படுத்தல் சமூக விலகல் போன்ற நடவடிக்கைகள் விவிலிய வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றன என்று சிந்திக்குமிடத்து அவை கூறும் செய்தி என்ன? பழைய ஏற்பாட்டில் இறைமக்கள் தமது சமூக வாழ்வையும் சமய வாழ்வையும் பிரித்துப் பார்க்கவில்லை. வாழ்வின் அனைத்து நிகழ்வுகளையும் இறை நம்பிக்கையின் ஒளியில் பார்த்தார்கள். அங்கு இறைவனது வழி நடத்துதலையும் பராமரிப்பையும் அனைத்து நிகழ்வு களையும் இறை நம்பிக்கையின் ஒளியில் நோக்கினார்கள். இவ்வாறு அவர்களுடைய ஆன்மீக வாழ்வில் ஒரு பரிணாம வளர்ச்சியைக் கண்டார்கள். இயற்கையின் அழிவுகள் அரசியல் தோல்விகள் உடல் நோய்கள் போன்ற துன்பங்கள் மத்தியில் இறைவனுடைய துணை வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து இறைவன் பக்கம் மீண்டும் மீண்டும் திரும்பி வந்தார்கள்.

**ஆரோக்கிய வாழ்வே நோக்கமாகும்**

பழைய ஏற்பாட்டில் அரசர்கள் இரண்டாம் நூலிலும் லேவியர் ஆகமம், எண்ணாகமம் போன்ற நூல்களில் தொழுநோய் பற்றிய விதிமுறைகள் வழங்கப்படுகின்றன. "ஒருவர் உடலில் தொழுநோய் ஏற்படில் குரு அவர் உடலில் நோய் இருக்கும் இடத்தைப் பார்த்து அவரை ஏழு நாள் அடைத்து வைப்பார்" ஏழாம் நாள் அவரைப் பார்க்கும் போது நோய் பரவாமல் குறைந்திருந்தால் மீண்டும் ஏழு நாள் குரு அவரை அடைத்து வைப்பார்... நோய் பரவாமல் குறைந்திருந்தால் அவர் தூய்மையானவர் என குரு தீர்ப்புச் சொல்வார்." (லேவியர் 13:3-6) இவ்வாறு தொழு நோய் போன்ற தொற்று நோய் வேளையில் அவர்களைத் தனிமைப்படுத்துவதும், சமூக விலகல் நடவடிக்கையை மேற்கொள்வதும் ஒரு தண்டனையாக அல்ல நோய் தொற்றுவதிலிருந்து தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கருதப்பட்டது. இது ஓர் ஆரோக்கியமான சூழலை சமூகத்தில் ஏற்படுத்தும் முயற்சியாகவே கொண்டிருந்தது. நோயிலிருந்து குணம் பெறுகின்ற வேளையில் அவர்களை மீண்டும் சமூகத்தோடு இணைத்துக் கொள்வதில் அச் சமூகம் மகிழ்வு கொண்டது. இவ்வாறு சமயமும் சமூகமும் மக்களின் ஆரோக்கியமான வாழ்வில் அக்கறை கொண்டு செயற்பட்டதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**குணமாக்கும் இயேசு**

இயேசுவின் காலத்திலும் தொழுநோய் ஒரு தொற்று நோயாகவும் சமூகத்தில் ஒரு துன்பியலாகவும் கருதப்பட்டது. அதனால் தொழுநோயாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள், மக்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டார்கள். புனித லூக்கா நற்செய்தியில் "பத்துத் தொழுநோயாளர்கள் இயேசுவுக்கு எதிர்கொண்டு வந்து தூரத்தில் நின்று கொண்டே ஐயா! இயேசுவே எங்களுக்கு இரங்கும் என்று உரக்க குரலெழுப்பி வேண்டினார்கள்." (லூக் 17:12-13) இங்கு இயேசுவின் மனநிலை தொற்று நோயாளர்கள் மட்டில் ஆரோக்கியமுள்ளதாகவும் பரிவு கொண்டதாகவும் விளங்கியது. அதாவது அவர்களை காலதாமதமின்றி குணமாக்கி மீண்டும் அவர்களை சமூகத்தோடு இணைக்கின்றார். எனவே தொற்று நோயின் பொழுது தனிமைப்படுத்தல் அல்லது சமூக விலகல் போன்ற நடவடிக்கைகளின் நோக்கம் நோயுற்றவர்களை அந்நியப் படுத்துவதற்கோ அல்லது அவர்களைத் துன்புறுத்துவதற்கோவல்ல மாறாக அவர்களையும் அவர்களது உறவுகளையும் ஆரோக்கியமான வாழ்வுக்கு இட்டுச் செல்வதற்கே. பத்துத் தொழு நோயாளர்களை இயேசு உடனடியாகக் குணப்படுத்தினார் என்பது இயற்கையின் அழிவிலிருந்தும், தீமையின் சக்தியிலிருந்தும் மனிதர்களை விடுவிக்க வல்லமை கொண்டவர் இயேசு என்பதை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. மருத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் மனித இனம் எவ்வளவு வளர்ச்சி கண்டிருந்தும் கடவுளின் வல்லமையும் இணைகின்ற பொழுது தீமைகள் அகன்று போகின்றன.

**சுய தனிமைப்படுத்தலின் நன்மைகள்**

இலங்கையிலேயோ கனடாவிலேயோ அல்லது ஐரோப்பிய நாடுகளிலேயோ கொரோனா தொற்று நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வண்ணம் இல்லங்களில் இருங்கள் என்ற சுய தனிமைப்படுத்தலுக்கு அறிவுரை கூறுவது சில அசௌகரியங்களுக்கு மக்களை உட்படுத்தினாலும் பல நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது தன்னுடைய பழுவான பணியின் மத்தியிலும் பல தடவைகளில் சமூகத்திலிருந்து விலகி தனித்திருக்க விரும்பினார். அதற்குக் காரணம் தம் தந்தையாகிய கடவுளோடு செபத்தில் ஒன்றித்திருந்தார். "அந்நாட்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்." (லூக் 6:12).

இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு எம்மை இசைந்து கொடுப்பது எமக்கும் இறைவனுக்கும், எமக்கும் எம் குடும்ப உறவுகளுக்கும் இடையேயுள்ள உறவை ஆழப்படுத்துவதற்கும் மிகவே தேவையான ஒரு சந்தர்ப்பமாகும். இயேசு தம் பணியை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு தேவையான சக்தியையும் அருளையும் பெற்றுக் கொண்டது போல இத் தனிமைப்படுத்தப்படுகின்ற காலங்களில் எம்மையே நாம் ஆய்ந்து பார்ப்பதற்கும் எம் குடும்ப உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் சுய தனிமைப்படுத்தல் நன்மை பயக்கும் காலமாகும்.

இவ்வாறு தனிமைப் படுத்தலுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்காத பட்சத்தில் வைரஸ் கிருமிகளைக் காவிச் சென்று சமுதாயத்திற்குப் பங்கம் விளைவிக்கும் ஊடகமாக மாறிவிடுவோம். அப்படியல்லாமல் பிறர் மீது அக்கறையும் பரிவும் கொண்டவர்களாக சமூகத்தின் ஆரோக்கிய வாழ்வுக்கு பங்களிக்கின்ற நல்ல பிரஜைகளாக இவ் இக்கட்டான சூழலில் திகழ்வோம். எனவே சுய தனிமைப்படுத்தல் எமக்கு தனிப்பட்ட முறையில் எம்மைப் பாதுகாப்பது மட்டுமல்ல இன்னும் விசேட விதமாக அடுத்தவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு நாம் எடுக்கும் ஒரு நல்ல முயற்சியாகும். கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் இக் காலம் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் தவக்காலத்தை இன்னும் ஆழமாக அனுசரிக்கத் தூண்டும் காலமாக அமைகிறது.

உண்மையான தவக்காலம் நம் ஆண்டவர் இயேசு நாற்பது நாள் பாலைவனத்தில் நோன்பிருந்தார். "இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவ் அதே ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார்." (லூக்கா 4:1-2). அலகையினால் சோதிக்கப்பட்ட இயேசு சோதனையை வென்று தாம் இறைமகன் என்பதை நிரூபித்தார். "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக." என்ற மறைநூல் வாக்கை தம் வாழ்வின் வெற்றி வாகையாகச் சூடினார். கொரோனா வைரசின் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு துன்புறும் மனித சமூகம் முழுவதுமே இயேசுவைப் போன்று அலகையினால் சோதிக்கப்படுகிறது. இவ்வுலகின் சிற்றின்பங்கள், போலி கௌரவங்கள், அதிகார வெறி என்பவற்றிற்கு அடிபணியாமல் இன்னும் அதிகமாக கடவுளை நம்பவும், அவரை வணங்கவும், அவர் பணி செய்யவும் தனித்தும் கிறிஸ்தவ சமூகமாகவும் நாம் மனம் மாறும் காலமாக இத்தவக்காலத்தை அனுசரிக்க இயேசுவுக்கு எங்களை அர்ப்பணிப்போம்.

எனவே தனிமைப்படுத்தலும் சமூக விலகலும் கிறிஸ்தவ வாழ்வின் முரண்பாடல்ல. மாறாக இறைவனோடும் அயலவரோடும் எம்மை அன்புறவில் இணைத்து உடலாலும் உள்ளத்தாலும் ஆரோக்கியமான வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்லும் ஒரு ஆன்மீக புதுப்பித்தல் வாழ்வாக ஏற்றுக்கொள்வோம்.

# உடலால் தனித்திருத்தலும் உள்ளத்தால் இணைந்திருத்தலும்



## உடலால் தனித்திருத்தலும் உள்ளத்தால் இணைந்திருத்தலும்

கொரோனா-கோவிட்19 என்ற இந்த கொடிய நோயை எதிர்கொள்ள மூன்று வகையான பலம் அவசியம். உடல் பலம் உளப்பலம் ஆன்மீகப்பலம். எங்கள் எங்கள் வியாக்கியானங் களையும் விளக்கங்களையும் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு மனித குலத்திற்கு பொதுவான இந்த எதி ரியை எதிர்கொள்ள இந்த மூன்று சக்திகளையும் வளர்ப்பதும் ஒருங் கிணைப்பதும் அவசியமாகும். அனைவருக்கும் ஆரோக்கியமான உணவு கிடைக்க வகை செய்வதும் (இன்று இயல்பாக பலர் இப்பணியைச் செய்ய ஒருங்கிணைவதை மகிழ் வோடு அவதானிக்க முடிகிறது) தேவை யற்ற பீதியைத் தவிர்த்து உளவரணை அதிகரித்துக் கொள்வதும் •(சமூக வலைத்தளங்களினூடாகப் பரப்பப் படும் பல வதந்திகளும் உண்மைக்குப் புறம்பான செய்திகளும், அச்சுறுத்தல் களும் மக்களின் உளவுரணை பெரிதும் பாதிப்பதாக அமைந்திருக் கின்றன. அதனால் சமூக வலைத் தளங்களில் உலா வருவதைக் குறைத்துக் கொள்வது மிகுந்த பலன ளிக்கும்) இறைவேண்டலில் ஈடுபட்டு ஆன்மீக பலத்தை அதிகரித்துக் கொள்வதும் (அகற்றிவிடும் ஆண்ட வரே என்பதற்கு மேலாக இச்சவாலை எதிர்கொண்டு வெற்றிபெற மனுக்குலத் திற்கு திடம் கேட்பதும், நாமொவ்வொரு வரும் எம்மாலான பங்களிப்பை வழங்க - வீட்டிலிருப்பது, அயலவருக்கு உதவுவது, - உளம் கேட்பதும் பயன் தரும். முன்னைய மன்றாட்டு ஒரு

அருட்பணி
எம்.வி.இ.இரவிச்சந்திரன்

எல்லைக்கப்பால் விரக்தியைக் கொண்டுவரலாம். இரண்டாவது வகை மன்றாட்டு எப்போதும் பலத் தைத்தரும்) மிகமிக அவசியமாகும்.

மனிதகுலம் தனது அகபுற சக்திகளை ஒருங்கிணைக்கும் போது இந்நோயை கடந்து போவது சாத்தியமாகும்.

### இதுவும் கடந்து போகும்

இவ்வருடம் நாம் எதிர்கொள்ளும் வித்தியாசமான பாஸ்கா எந்தச் சிலு- வையும் துன்பச் சிலுவையாகவே என்றும் இருக்கப் போவதில்லை மாறாக சிலுவைத் துன்பம் கடப்பிற் குரியது அது உயிர்ப்பின் மகிமை யால் நிறைய வேண்டியது என்ற நம்பிக்கையை நமக்குத் தருகிறது.

இயேசு சிலுவைச்சாவை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்தது போல மனுக்குலமும் இக்கொரோனா என்னும் துன்பத்தை கடந்து போகும் புத்துயிர் பெறும் என்ற முழுமையான நம்பிகையோடு இவ்வருட பாஸ்கா விழாவை ஆன்மீக ஆழத்தோடு எதிர் கொள்வோம்.

## கொரோனா சொன்ன பாடம்

2014 டிசெம்பர் 26ம் திகதிவரை எம்மில் பலருக்கு சுனாமி என்ற ஒரு சொல்லே தெரியாதிருந்தது. ஆனான் அன்றைய தினத்தின் பின் உலகில் அதை அறியாதவர் எவருமிருக்க முடியாதென்கின்ற அளவிற்கு அது கோரத் தாண்டவம் ஆடிச் சென்றது. அதுபோலவே கடந்த மூன்று மாதங்களின் முன்புவரை எம்மில் பலர் கொரோனா என்ற சொல்லை அறியாதிருந்தோம் ஆனால் இன்று தினமும் பலதடவை எல் லோரும் உச்சரிக்கும் சொல்லாக அது மாறியிருக்கிறது. மனிதரின் வாழ்வையே எதிர்பாராத விதமாக எதிர்பாராத வகைகளில் அது புரட்டிப்போட்டுள்ளது.

### எதிர்வினைகள்

உலகில் பலரும் தமது கோட்பாடு மற்றும் நோக்குநிலைகளில் இருந்து இன்றைய நிலைக்கு எதிர் வினையாற்றி வருவதை அவதானிக்க முடிகிறது.

✷ கடவுள் இல்லையென்று நம்பு பவர்கள் கடவுள் இல்லை என்ற தமது வாதத்திற்கு ஆதாரமாக இந் நோய்த்தொற்றை முன்வைக்கிறார்கள்

✷ நம்பிக்கையாளர்கள் தத்தமது சமய நூல்களின் வரிகளைத்தேடி வலிந்து பொருள் தருகிறார்கள். தண்டனை என்றும் தீர்ப்பு என்றும் எச்சரிக்கை என்றும் மனமாற்றத்துக் கான அழைப்பு என்றும் அடிப்படை வாதத்திலிருந்து தாராண்மைவாதம் வரையான தத்தமது நிலைப்பாடுக ளின்படி அவர்களது விளக்கங்கள் அமைந்திருக்கின்றன.

✷ ஆசிய நாடுகளிலே கிறிஸ்தவ மத எதிர்ப்பாளர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது காழ்ப்புணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். இஸ்லா- மிய எதிர்ப்பாளர்களும் அவ்வாறே செய்கிறார்கள்.

✷ கட்சிகள் தமது கட்சி அரசி யல் நன்மைகளுக்காக இந்நோயைப் பயன்படுத்துகிறார்கள்

✷ புகழ் விரும்பிகள் சிலர் சமூக வலைத்தளங்களில் சிறுசிறு உணவுப் பொதிகளோடு உலா வருகிறார்கள்

✷ மனித நேயமிக்கவர்கள் இணைந் தும் தனித்தும் நற்பணிகளில் ஈடுபடுகிறார்கள்.

✷ சதிக் கோட்பாட்டாளர்கள் 'நிகழ்ச்சி நிரல் 21' என்றும் அனைத்தும் 'இலுமினாட்டிகளின்' வேலை என்றும் விளக்கம் கொடுக்கிறார்கள்

இத்தகைய பல்வேறுபட்ட எதிர் வினைகளின் மத்தியிலே சாதாரண பாமர மக்களோ விழிபிதுங்கி விளக்கங் கள் புரியாது இது எப்போது முடியும்? நாம் சாதாரண வாழ்க்கைக்கு எப் போது திரும்பலாம்? வயிறாற எப்போது உண்ணலாம் என்று அங்கலாய்க்கி றார்கள்.

### உலகம் இப்படித்தான் இருக்கிறது

அன்ரனி டி மெலோ அவர்கள் தனது நூலொன்றிலே அருமையான கதையொன்றைத் தொகுத்துள்ளார். ஒரு மனிதர் சில குதிரைகளை வைத்து தன் பிழைப்பை நடத்தி வந்தார். ஒரு நாள் அக்குதிரைகள் அனைத்தும் காணாமல் போய்விட்டன. அப்போது அவரிடம் துக்கம் விசாரிக்க வந்த மக்கள் 'உமக்கு வாழ்வாதாரமாக இருந்தது அந்தக் குதிரைகள் தானே அவற்றையும் கடவுள் பறித்துவிட்டாரே அவருக்குக் கண்ணில்லையா? என்ற னர். அப்போது அந்த மனிதர் 'நன் மைக்கோ தீமைக்கோ நான் அறி- யேன்' என்று சொல்லி அமைதியாக இருந்து விட்டார். சில நாட்களில் அந்த குதிரைகள் காட்டிலிருந்து வேறு சில குதிரைகளை அழைத்து வந்து விட்டன. இதைப்பார்த்த ஊரவர்கள் பார்த்தாயா கடவுள் எவ்வளவு நல்லவர் உனக்கு அதிகம் குதிரைகளைக் கொடுத்திருக்கிறாரே என்றனர். அப் போதும் அவர் நன்மைக்கோ தீமைக்கோ நானறியேன் என்று அமை தியாக இருந்து விட்டார். இப்போது அவருடைய மகன் புதிய குதிரைகளை அடக்கிக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது குதிரை கீழேவிழுத்திஅவனதுகால்கள்முறிந்து விடுகின்றன. இப்போது மீண்டும் ஊரவர் கடவுளுக்குக் கண்ணில் லையா உமக்குத் துன்பத்திற்கு மேலே துன்பம் தருகிறாரே என்றனர். அப் போதும் அவர் நன்மைக்கோ தீமைக்கோ நானறியேன் என்றார். தொடர்ந்து நாட்டில் ஓர் போர் ஆரம்ப மாகியது மன்னன் எல்லா இளை ஞர்களையும் படையில் சேரக் கட் டளை பிறப்பித்தான். வீடுவீடாக வந்த படையினர் இளைஞர்களை கட்டாய மாக படைக்கு அழைத்துச் சென்ற னர். இவரது வீட்டிற்கு வந்த போது இளைஞனின் கால்கள் முறிந்திருப் பதைக் கண்டு அவனை விட்டுச் சென்று விடுகின்றனர். மீளவும் மக்கள் நீ கொடுத்து வைத்தவன் பார் எங்கள் பிள்ளைகள் எல்லாம் போருக்கு சென்று விட்டனர் உனது பிள்ளை மட்டும் தப்பி விட்டான் என்றனர். அதற்கும் அவர் நன்மைக்கோ தீமைக்கோ நான றியேன் என்று சொல்லி அமைதி யாக இருந்தார்.

உண்மை என்னவென்றால் உலகம் இவ்வாறுதான் இருக்கிறது. நன்மையும் தீமையும், அழிவும் ஆக்க மும், இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்துதான் போகின்றன. வரலாறு பதிவுற்ற காலத்திலிருந்தே இயற்கை ச்சீற்றமும் அதனால் வரும் அழிவு- களும், கொள்ளை நோய்களும் கோடிக் கணக்கான மக்கள் அழிவதும் வரலாற் றின் பக்கங்களிலே திரும்ப திரும்ப பதியப்பட்டே வந்திருக்கின்றன. காரண காரியங்கள் நமக்குத் தெரியாத போதும் புரியாத போதும் உலகின் போக்கைப் புரிந்து கொண்டு அவற்றை இயல் பாக ஏற்றுக் கொள்வது வீண் வியாக் கியானங்களையும் முரண்பாடு கை- ளயும் கடந்து போக உதவும். மேலும் எமது சக்திகளை ஒன்று திரட்டிச் சவாலை எதிர்கொள்ளவும் துணை செய்யும்.

# தற்கொலை

## முன்னுரை

தற்கொலையைப் பற்றிஎழுதுவது மிகக் கடினம். பல்வேறு காரணங்களைக் காட்டி இவைதான் தற்கொலைக்கு காரணங்கள் என்று இலகுவாகச் சொல்லி விடலாம். சிலர் தங்கள் தற்கொலைக்கு தாங்களே பொறுப்பு என்று மடல் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்கிறார்கள். அதாவது, வேறு யாரையும் காரணங்காட்டி அவர்களை எக்காரணம் கொண்டும் கைது செய்யவோ அன்றேல் அவர்கள் மேல் குற்றச் சுமையை சுமத்த வேண்டாமென்று மற்றவர்களைப் பாதுகாப்பதற்காக அங்ஙனம் எழுதினார்களா? அவ்வாறெனில், தற்கொலை செய்யு முன்னரே மற்றவர்களைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் தற்கொலை செய்கிறார்களே! இவ்வளவு நல்லெண்ணங்கொண்டோர் ஏன் தற்கொலை செய்கிறார்கள்? தற்கொலையைப் பற்றி எழுதுவது கடினம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

## தற்கொலை செய்வோர் யார்?

**பல தரப்பட்ட மக்கள் தற்கொலை செய்கிறார்கள்.**

1. பொல்லாத தனிமையுணர்வில் மன அழுத்தம் கொண்டோர் சிலர் தற்கொலை செய்கிறார்கள். இன்னொரு வழியில்லை, நம்பிக்கை இல்லை, மன அழுத்தத்தின் நோவில் தற்கொலை செய்கிறார்கள். வேறு வழி இல்லை என்று எண்ணுவோர், தற்கொலையை ஒரு வழியாகப் பார்க்கிறார்கள்.
2. இழப்புகளால் அன்றேல் இழப்பேனோ என்ற பயத்தினால் தற்கொலை செய்வோர் சிலர். இதிலும் பல வகையுண்டு. காதலித்து அந்தக் காதலில் தோல்வி கண்டோர் தற்கொலை செய்வதுண்டு. வாழ்வாதார உழைப்பை இழந்ததினால் தற்கொலை செய்வோர் பலர். வறட்சியான காலத்தில் தோட்டம் அல்லது வயல் செய்வோர் அனைத்து வாழ்வாதாரத்தையும் இழந்து, நிவாரணமும் பெற முடியாது தவிக்கும் பொழுது, வேறு வழியேதும் தெரியாத பொழுது தற்கொலை செய்ததுண்டு.
3. கடன் தலைக்குமேல் சென்று கடன் கொடுத்தோரின் தொல்லைகளையும் உறுத்தல்களையும் மேலும் சகிக்க முடியாத நிலையில் தற்கொலை செய்தோர் சிலர்.
4. கற்பழிக்கப்பட்டதினாலோ, வன்புணர்வு கொண்டதினாலோ, இனி சமுதாயத்தின் கண்களில் தன்னைக் காட்டிக் கொள்ள முடியாத காரணத்தினால் தற்கொலை செய்தோர் பலர்.
5. நன்றாகக் கல்விகற்று, பரீட்சையிலும் நன்கே செய்து ஒன்பது A கிடைக்கும் என்ற கனவில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த மாணவன், மாணவி ஒன்பது A கிடைக்காத தோல்வியில், கனவு சிதறியதில், சக மாணவர்களை, மாணவியரை சந்திக்க முடியாமல், பாடசாலை ஆசிரிய, அசிரியர்களைக் காண விரும்பாது, பெற்றோரின் ஏமாற்றத்தை சகிக்க முடியாமல் தற்கொலை செய்யும் மாணவ, மாணவிகள் வட மாகாணத்தில் அண்மைக் காலத்தில் பெருகி வருவதை வேதனையுடன் பார்க்கின்றோம்.
6. கணவன் அடித்த காரணத்தினால் கயிற்றில் தொங்கிய மனைவியரும் உண்டு.
7. பெற்றோரின் இடைவிடாத சண்டையினாலும் அவர்களது உச்சக்கட்ட பேச்சுத் தொனியையும் ஏற்றுக் கொள்ள முடியாது ஓடிச் சென்று தன்னைத் தானே மாய்த்துக் கொண்ட சிறுவர்களின் பரிதாப சாவைப் பார்த்து துன்பப்பட்டோர் பலர்.

இவ்வாறாக பலதரப்பட்ட தற்கொலைகளைப்பற்றி நாம் அறிந்துள்ளோம். இன்னும் பல வகைகள் உண்டு.

## திட்டமிடப்பட்டவையா?

பொதுவாக தற்கொலைகள் திட்டமிடப்பட்டு செய்யப்படுவன அல்ல. ஆயினும், இன்னாள் தற்கொலை செய்யலாம் என்ற சில அறிகுறிகள் தோன்றலாம். இவற்றைப் பார்த்தும் வார்க்காமல் இருப்போர் மனிதர்கள் அல்ல.

## சில அறிகுறிகள்

தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்வார்கள். (கொறோனாவின் தனிமைப்படுத்தல் அல்ல). ஒருவரோடும் எந்த உரையாடலையும், உறவுகளையும் வைத்திருக்கமாட்டார்கள். எங்கோ எதையோ பார்ப்பது போல ஒரு சோக முகத்துடன் காட்சி தருவார்கள். எதிலும் ஒரு பிடிப்பற்ற தன்மை. எதையே இழந்துவிட்ட ஒரு தோற்றம்.

பெரும்பான்மையான தற்கொலைகள், (விசேடமாக உளவள நோய்களுக்கு உட்பாடாதவர்கள்) திடீரெனத் தோன்றும் உணர்வுகளால் மேற்கொள்ளப்பட்டு, செய்வதறியாது ஓர் அவசர முடிவை எடுப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

இவர்கள் எழுதிவைத்த காரணங்களோ அன்றேல் சமூகத்தில் பேசப்படும் காரணங்களோ மேலெழுத்த வாரியான காரணங்களே. ஒருசில உதாரணங்களைப் பார்ப்போம்.

## உதாரணம் ஒன்று ஒன்பது 'A'

ஒன்பது A கிடைக்கும் என்ற கனவில், நினைவில் மிதந்து வந்த மாணவன், மாணவி எட்டு A மட்டுமே கிடைத்ததால் தற்கொலை. இதைக் கட்டமைத்து பெரிதுபடுத்தும் ஊடகத்தினர் ஒரு புறம். இந்த மாணவ மாணவியரின் பின்புலத்தில் தற்கொலைகளுக்குப் பல காரணங்கள் உண்டு.

இன்று இந்த நாட்டில், அதுவும் குறிப்பாக வட பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகளில் பெரும்போட்டி தோன்றியுள்ளது. இந்தப் போட்டியை வளர்ப்பவர்கள் பாடசாலை / கல்லூரி ஆசிரிய ஆசிரியைகள், முதல்வர்கள், பெற்றோர்கள் இந்த வரிசையில் இணைக்கப்படவேண்டியவர்கள். ரியூசன் நிலையங்களும் இந்த வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். இந்தப் பாடசாலை / கல்லூரி முதல்வர்களுக்கும், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மாணவ /மாணவியர் முக்கியம் அல்ல. தங்கள் கல்லூரியின் பெயர் தான் முக்கியம். குளத்தடிப் பாடசாலையில் 30 மாணவர்களுக்கு 9A என்றால் பனை மரத்தடிக் பாடசாலையில் மூன்று மாணவர்களுக்கு 9A மட்டுமே. இதைப் பெரிதுபடுத்தி எழுதும் ஊடகங்களும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறார்கள். மேல் நாடுகளில் இப்படிப்பட்ட பழக்கம் கிடையாது.

நிறைய 9A எடுத்த மாணவ, மாணவியரின் நிழற்படத்துடன் பாடசாலையின் முன் - தெருவால் போவோர் வருவோர் பார்க்கும் படி பெரிய விளம்பரப் படங்கள். இப்படிப்பட்ட பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள பெற்றோர் பெருங்கூட்டம். அதற்குள் கைமாறும் பணம் வேறு. இதற்குப் பெயர் நன்கொடை. உண்மையில் அது, இலஞ்சம். இப்படிப்பட்ட பாடசாலைகளில் கல்வி பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கியே கற்பிக்கப்படுகின்றதே ஒழிய மாணவ, மாணவியரை நல்ல மனிதர்களாக, ஒழுக்க சீலர்களாக, தங்கள் கால்களில் ஊன்றி பக்குவப்பட்ட மனிதர்களாக உருவாக்குவதில் எந்தக் கவனமும் செலுத்தப்படுவதில்லை. பெற்றோருக்கு இந்த அக்கறை இல்லை. ஆசிரிய, ஆசிரியைக்கும் இந்த அக்கறை இல்லை.

ஓர் ஆளுமையை வளர்க்காத பாடசாலை/கல்லூரி எதற்காக? இந்த ஆளுமையை இழந்த மாணவ/மாணவியர்கள், வேரூன்றி வளராத மாணவ / மாணவியர் சிறிய தோல்வியை கண்டதும் துவண்டு போகிறார்கள். உடனே தற்கொலை. பொறுப்பேற்க வேண்டியவர்கள்: பெற்றோர், பாடசாலைகள், ஆசிரிய/ஆசிரியைகள், கல்லூரி முதல்வர்கள், ஊடகங்கள் மாறுவர்களா?

## இன்னோர் உதாரணம்

கணவன் மனைவிக்கு அடித்ததால், மனைவி தூக்குக் கயிற்றில். இது, ஊடகத் தலையங்கம். ஒரு நாள் காலை எழுந்ததும், கணவன் மனைவிக்கு அடித்தானா? (மன்னிக்கவும். அடித்தார் என்று எழுத மனம் வரவில்லை) இப்படியான காட்சிகள் தமிழ்த் திரைப்படங்களில் வடிவேலு செய்வதுண்டு. அது, வாழ்க்கை அல்ல.

தூக்குக் கயிற்றில் தொங்கு முன்னர் பல்வேறு பிரச்சினைகள் கணவன் - மனைவியிடையே நடந்திருக்க வாய்புண்டு. பணப்பிரச்சினை, சீதனப்பிரச்சினை, மாமன்மாமியார் பிரிச்சினை, கணவன் - மனைவி தங்கள் வாழ்க்கையைப் பற்றி



ஒருவரோடு ஒருவர் பகிராமை, உணர்வுகளை எடுத்துரையாமை, கணவனை விட மனைவி கல்வித் தகைமையில் வளர்ந்திருப்பது, அன்பில்லாமல் காமத்துக்கு மட்டுமே முதன்மை கொடுப்பது, பாலுறவில் வன்மை, என்று பட்டியல்

கரவையூர் செல்வம்

வளரும். இவ்வளவு பிரச்சினைகள் நாளாந்தம் நடந்தும் இவர்கள் உதவியை நாடாமை, அந்தக் கசப்பான உணர்வுகளை அடக்கி வந்தமை, இல்லற வாழ்வில் அர்த்தம் காணாமை. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து மனத்தை அழுத்தும் பொழுது மனைவிக்கு தோன்றும் ஒரே வழி -தற்கொலை

## தன்னம்பிக்கை

தன் நம்பிக்கையில் இவர்கள் வளரவில்லை, வளர்க்கப்படவில்லை. புறத்தையே நம்பி வாழ்ந்தார்கள். தமக்கென்ற ஓர் ஆளுமையை இவர்கள் வளர்க்கவில்லை. தமக்கென்று ஓர் அடையாளத்தை இவர்கள் வளர்க்கவில்லை. இவர்களுடைய அய்யாளம் முழுது முழுதாகப் புறத்திலேயே அமைந்தன. அந்தப் புறத்தில் உள்ளவை திடீரென இல்லாமல் போகும் பொழுது, இவர்கள் வாழ்க்கையில் ஒரு வெறுமையையே அனுபவிப்பார்கள். அந்த வெறுமையைத் தாங்க முடியாமல், தப்பிச் செல்ல வழி - தற்கொலை.

## தற்கொலை ஒரு வன்செயல்

தற்கொலை வன்செயல். கொலை செய்வது எவ்வளவு வன்மையானதோ, அதே போன்று தற்கொலையும் ஒரு வன்செயல்தான்.

எனது வாழ்க்கை எனக்கு மடடும் உரியதல்ல. இந்தப் பேருண்மையை பலர் உணர்வதில்லை. கல்லூரிகளோ, மதங்களோ இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்தவில்லை.

பரிணாம வளர்ச்சியில் அல்லது படிமுறையில் (Process) அறிவுடன் தோன்றிய மனித இனம் இந்தப் பிரபஞ்சத்தின் (Universe) ஒரு பகுதி. அந்த ஒற்றுமையில் (Unitiveness) இருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்கும் பொழுது, இந்த வேற்றுமையில் தோன்றுவது இருமை வாதம் (Dualism) இந்த வேறுபடுத்தலில் இருந்து உருவாகுவதுதான் வன்செயல். நான் மற்றவர்களிடமிருந்து என்னை நானே வேறுபடுத்திப் பார்க்கும் பொழுது, தனித்துவிட்டேன் என்ற உணர்வு மேலோங்கும். இந்த உணர்வைக் கையாள முடியாத நம்பிக்கையற்ற தன்மையில் தோன்றும் ஒரே வழி - தூக்குக் கயிறு.

## பிரபஞ்சத்தின் ஒரு பகுதி

நான் இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி : மனித இனத்தின் ஒரு பகுதி. இவற்றில் இருந்து, அதாவது அந்த முழுமையில் (WHOLENESS) இருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது. அது விஞ்ஞானமும் அல்ல : ஆன்மீகமும் அல்ல. இந்தப் பேருண்மையை பரீட்சைப் பெறு பேறுகளை மட்டுமே மையமாக்கி செயற்படும் பாடசாலைகள் / கல்லூரிகள்/ பல்கலைக் கழகங்கள் தவறிவிடுகின்றனர். "பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?"

அதேபோன்று வெறும் புற ஆராதனைகளையும், அர்த்தமற்ற சடங்குகளையும் மையமாகக் கொண்டு மதத்தையே வளர்க்கும் மதங்கள் ஓர் உலகளாவிய ஆன்மீகம் ஒன்று உண்டு, அந்த ஆன்மீகத்தை நோக்கிப் பயணிப்பதே உண்மையான மதத்தின் நோக்கம் என்று கற்றுக் கொடுக்காத மதங்கள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுத்தல் வேண்டும். தன் நம்பிக்கையும், இறை நம்பிக்கையும் ஒன்றாகவே வளர்க்கப்பட வேண்டும். இந்த நம்பிக்கை வேரூன்றாது போனால், பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் பொழுது 'கடவுள்' என்ற எண்ணமே வராது.

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறு தருவேன்" என்று இயேசு என்ற பெரும் ஞானி அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்தார். "இளைப்பாறு" என்ற சொல் ஆங்கிலத்தில் "Rest" என்ற சொல்லின் மொழிபெயர்ப்பு. இந்த "Rest" என்ற சொல்லின் விளக்கம்: உங்கள் சுமைகளில் இருந்து உங்களை நீங்களே விடுதலையாக்கி கொள்ள வழி காண்பீர்கள்! கிறிஸ்துவை அகத்தில் சந்தித்தால் (Encounter) நீங்கள் அனைத்து சுமைகளிலும் இருந்து விடுதலை பெறுவீர்கள். இந்த இயேசுவிடம் அழைப்பு அனைத்து மக்களுக்கும் விடுக்கப்பட்ட அழைப்பு என்பது "எல்லாரும்" என்ற சொல்லில் தெளிவாக்கப் பட்டுள்ளது.

## எம்முள் ஒரு சக்தி

"மனிதன் மிருகமாகலாம், தெய்வம் ஆகலாம்" என்றோர் பழைய பாட்டொன்று உண்டு. அந்த தெய்வீக சக்தி எம்முள் உள்ளது. கட + உள் = அனைத்தையும் கடந்து, அனைத்துக்குள்ளும் இருக்கும் ஒரு சக்தி. இந்த சக்தியை உணர்ந்து, கொஞ்சமாவது அனுபவத்தால் அந்த சக்தியில் இருந்து ஒரு நம்பிக்கை தோன்றும். இப்படிப்பட்ட ஒரு சக்தியில் நான் வேரூன்றி வளருவேயானால், பிரச்சினைகள் மலைபோல் வந்தாலும், பாறைகள் போன்று தோன்றினாலும், அவற்றிற்கு முகம் கொடுக்க எம்மால் முடியும். தற்கொலைக்கு மாற்று வழிகள் உண்டென்ற உணர்வும், அறிவும், நம்பிக்கையும் தோன்றும். இதை வளர்க்க வேண்டியவர்கள் பெற்றோர், மத குருக்கள், துறவிகள், பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள். ஆனால் "பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?"

**கட்டுரை ஆசிரியரின் குறிப்பு :**

" தற்கொலை" என்ற பெருந்தலைப்பிற்கு இக்கட்டுரை நிறைவளிக்காது. தொடர் கட்டுரைகளாக பல ஆய்வுகளின் முடிவுகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

# கொரோனா: முடிவு காலமா அல்லது முடிக்கும் காலனா?

### கொரோனா கற்பித்த பாடம்

கொரோனா கற்பித்த பாடம் என்று இன்னுமொருவர் எழுதியிருந்தார். கொஞ்சம் சிந்திகத் தூண்டுவதாக உள்ளது. 'புனிதத் தலமான மெக்கா வெறிச்சோடிக் கிடக்கிறது. ஈரானில் வெள்ளிக்கிழமைத் தொழுகை தற்காலிகமாய் நிறுத்தி வைக்கப்படுகிறது. வத்திக்கானில் திருத்தந்தை பொதுமக்களை சந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இந்தியாவில் கோலிப்பண்டிகை கொண்டாடுவதை பிரதமர் தவிர்க்கிறார். முதலில் உயிர். அதற்குப் பிறகுதான் மதம் என்று ஒவ்வொரு முறையும் இயற்கைப் பேரழிவுகள் நிரூபித்தாலும் துயரம் முடிந்தவுடன் மீண்டும் மதங்களை தூக்கிக்கொண்டு சுமக்கவே துடிக்கிறது இந்த பாழாய்ப் போன மனம். கற்றுக்கொள்வோம் மதம் பிடிக்காமல் வாழ்வதற்கு!' என இவ்வரிகள் செல்கின்றன. எப்போது இதனை உணர்ந்து மதம்பிடிக்காத, மனித சாயலாக இறைவன் உருவாக்கிய அந்த உத்தம மாண்புடைய உண்மை மனிதர்களாய் உருமாறப் போகின்றோமோ!?

### வருமுன் காப்பதே சிறந்தது!

கொரோனா வைரஸ்சின் பரம்பலைக் கட்டுப்படுத்த பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் மூடிவிட்டனர். இப்போது ஏனைய தனியார் நிறுவனங்களையும் மூடும்படி அரசு பணிப்புரைகளை விடுத்திருப்பதோடு ஊரடங்கையும் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றது! அறுபது மணிநேர ஊரடங்கு அமுலில் இருக்கின்றது. இன்னும் எத்தனை அறுபது மணித்தியால ஊரடங்கு அமுலுக்கு வரவிருக்கின்றதோ என்று கடுமையாக சிந்திக்க வேண்டி இருக்கின்றது. இந்நடைமுறை நம் நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராகவும் வெவ்வேறு வடிவங்களில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. உலகம் முழுவதும் முடக்கப்பட்டு, இயக்கமற்ற நிலையை அடைந்திருக்கின்றது.

ஆனால், நமது நாட்டின் சில இடங்களில் (ஊரடங்குச் சட்டத்திற்கு முன்பதாக) உலகில் நடப்பது ஒன்றும் தெரியாதவர்கள்போல பலர் நடந்து கொண்டார்கள். பின் விளைவுகளை எண்ணிப்பார்க்காமல் இந்நாட்களில் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை இவர்கள் விளையாட்டாகக் கருதுகின்றார்கள். கோவில்களில், பொது இடங்களில் கூடிவருவதைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிவுரையைக் கேட்டு நடக்கும் மக்கள் இப்போது நகைக்கடைகளுக்கும் துணிக் கடைகளுக்கும் பெற்றோல் நிலையங்களுக்கும்படையெடுத்ததைஅறிவோம். இதற்குக் காரணம், அசட்டுத்துணிவாக இருக்கவேண்டும் அல்லது அறியாமையாக இருக்கவேண்டும். 'வருமுன் காப்போம்', 'நோயிலிருந்து குணமாகுதலைவிட அது வராமல் தடுப்பது மிகச் சிறந்தது' என்பதுபோன்ற படிப்பினைகளை அறிந்திருந்தாலும் அவற்றைக் கடைப்பிடிப்பதில் நம்மவர்கள் கடைநிலையில்தான் உள்ளார்கள் என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டித்தான் இருக்கின்றது.



### இத்தாலியிலிருந்து அபாய எச்சரிக்கை!

இந்நிலையில், இத்தாலி மிலான் மாநகரிலிருந்துஒருவர்சிலநாட்களுக்கு முன்னர் எழுதிய கடிதம் ஒன்று உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. உலகத்தின் கவனத்தை ஈர்த்தது, நம்மை ஈர்க்கவில்லை என்றால் நாம் தான் அதற்கான விளைகளை இத்தாலியர்களைப்போலஎதிர்கொள்ளவேண்டி வரும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்!

மேற்சொன்ன கடிதத்தில், "நாங்கள் இங்கு விட்ட தவறுகளிலிருந்தும் பிழைகளிலிருந்தும் நீங்கள் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். பெரிய தவறு என்னவென்றால், முதல் அறிகுறிகளில் ஆரம்பத்தில் மக்கள் வழக்கம்போல தொடர்ந்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர்! வேலை, பொழுதுபோக்கு மற்றும் விடுமுறைக்காலம் போன்ற உணர்வுகளுக்காக வீதிகளில் இறங்கினர். எனவே, நண்பர்களுடன் விருந்துகளுக்குக் கூட்டங்களாக ஒன்று கூடினர்! எல்லோரும் இவ்வாறு தவறு செய்தார்கள். நீங்களும் அப்படித்தான் என நினைக்கிறேன். நான் உங்களிடம் கெஞ்சுகிறேன்: கவனமாக இருங்கள், இது ஒரு சிரிப்போ நகைச்சுவையோ அல்ல! உங்கள் அன்புக்குரியவர்களையும் உங்கள் பெற்றோரையும் உங்கள் தாத்தா பாட்டிகளையும் பாதுகாக்கவும். இந்த நோய் அவர்களுக்கு ஆபத்தானது. ஒவ்வொரு நாளும் சுமார் 200 பேர் (இப்போது நாளுக்கு 700 பேருக்கு மேல் இறப்பதாகத் தகவல்!) இங்கு இறக்கின்றனர். ஏனெனில், மிலானில் இதை எதிர்க்க மருந்து இல்லை. இது உலகில் மிகச் சிறந்த நகரங்களில் ஒன்றாகும். மாறாக, அனைவருக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாததால் யார் இறப்பார்கள் என்பதை மட்டுமே மருத்துவர்கள் தேர்வு செய்கிறார்கள். அவரவர் தம் சுயநலத்தால் குடிமக்களைப் பொருட்படுத்தாமல் வழக்கம்போல தங்கள் வாழ்க்கையை தொடர முடிவுசெய்த முட்டாள்தனத்தால் மட்டுமே இந்த நிலை! இல்லாவிட்டால் பரவலைக் கட்டுப்படுத்த முடியுமாக இருந்திருக்கும். தயவுசெய்து எங்கள் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுங்கள்" என இக்கடிதம் செல்கின்றது.

### யாழ்ப்பாணத்திலிருந்தும் அதே எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருத்துவர் கௌதமன் 'அன்பான யாழ்ப்பாண மக்களே!' என விழித்து ஒரு மருத்துவராகக் கொரோனாத் தொற்றுப்பற்றிய சில விடயங்களையும் இந்நோயின் ஆபத்தினையும் தெளிவுறுத்தி இருக்கின்றார். கொரோனா வைரசின் தாக்கத்தை ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பார்த்த பின்னரும் செய்யவேண்டிய - கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகளை, தடுப்பு நடவடிக்கைகளை யாழ்ப்பாண மக்கள் ஏன் கைக்கொள்ளவில்லை என்பதைக் குறித்துத் தன் ஆதங்கத்தை மிகக் காத்திரமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். வெளியிடங்கள் செல்லாமல் வீடுகளில் இருக்க அறிவுறுத்தியும் மக்கள் வீதிகளில் நிற்பதாகவும், கடை-

**அருட்பணி செ. அன்புராசா**

கள் கொண்டாட்டங்கள் வழிபாட்டுத் தலங்கள் என மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதாகவும், நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதாகவும், இருமல் காய்ச்சல் இருப்பவர்கள்கூட அவை மற்றவர்களுக்குப் பரவும் என்ற எந்த குற்ற உணர்வுமின்றி இருப்பதாகவும், பாதுகாப்பாக இருப்பவர்களைப் பார்த்து பரிகாசம் செய்வதாகவும், எமக்கு வராது என்ற தவறான எண்ணத்துடன் இருப்பதாகவும், நோய் அச்சம் இன்றி வீட்டுச் சாமான்கள் வாங்கிக் குவிப்பதிலேயே குறியாக உள்ளதாகவும், இலங்கையில் பரவாது என்ற தவறான எண்ணத்துடன் இருப்பது போன்றவற்றால் நோய்பரவ வாய்ப்புக்கள் உள்ளதாக யாழ்ப்பாண மருத்துவர் கௌதமன் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

மேலும், 'கண்ணுக்குத் தெரியும் டெங்கு நோய்க் கிருமியைப் பரப்பும் நுளம்பையே கட்டப்படுத்த முடியாத நாம், கண்ணுக்குத் தெரியாத கொரோனாவைக் கட்டுப்படுத்துவது மிகக் கடினம் என்பதையும் கொரோனாவுக்கு மருந்தோ தடுப்பு மருந்தோ கிடையாது' என்பதையும் இதே மருத்துவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார். இன்னும், "யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கொரோனா கட்டுப்பாடின்றி பரவினால் வசதிகள் கிடையாது. வளர்ச்சியடைந்த நாடுகளில் முடியாத ஒன்று யாழ்ப்பாணத்தில் முடியுமா?" எனக் கேள்வி எழுப்பும் மருத்துவர் கௌதமன், "உங்கள் குழந்தைகள், மனைவி, சகோதரர்கள் நோயில் துடிப்பதை ரசிக்கும் மனம் உடையவர்களானால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம். நீங்கள் நீண்ட காலம் நோய் ஒன்றில் அவஸ்தைப்பட ஆசைப்பட்டால் மூச்சு எடுக்கமுடியாமல் துடிதுடிப்பதை விரும்பினால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம். பல இடங்களில் இறப்புச் சடங்கு, எட்டுச் சாப்பாடு சாப்பிட ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம். ஒருவேளை உங்களுக்கு மரணம் ஏற்பட்டால் யாரும் உங்கள் பிணத்திற்குக் கிட்ட வராமல் நடு வீதியில் நாய்களுக்கும் காக்காய்களுக்கும் எறும்புகளுக்கும் விருந்திட்டு அனாதைப் பிணமாக ஆசைப்பட்டால் தடுப்பு நடவடிக்கை வேண்டாம். இதுவே கசப்பான உண்மை. மன்னிக்கவும்" என மிகவும் மனவேதனைப்பட்டு வருமுன் காப்பதற்கான வழிமுறைகளைப்பற்றிச் சிந்திக்காத மக்களின் நடவடிக்கைகளையும் - அசட்டையீனங்களையும் சாடியிருக்கின்றார். சரியான தருணத்தில் மிகச் சரியான சாட்டையடி கொடுத்திருக்கின்றார் மருத்துவர் கௌதமன்.

### முன்னுக்குப்பின் முரணான செயல்கள்!

"அடேய் ஞான சூனியங்களா, ஊரடங்கு என்றால் எங்கயும் போக முடியாது. வீட்டிற்குள் முடங்கி இருப்பது. அதுக்கு என்டா பெற்றோலை இப்பவே அடிச்சு வைக்கனும்! இரண்டு நாளைக்கு அதையே சாப்பாட்டுக்குப் பதிலாக் குடிச்சு சாவுங்க" என றெஜிநோல்ட் சுதர்சன் யாழ்ப்பாணத்தின் நிலையை இரண்டுநாள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதற்கு முன் 20.03.2020இல் தன் முகநூலில் குறிப்பிட்டிருந்தார். மற்றைய இடங்களிலும் இதே நிலையிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருப்பதை பலரும் தொடர்ந்து அவதானித்து வருகின்றார்கள்.

கொரோனா பரம்பலைத் தடுக்கும் முகமாக சில நாட்களுக்கு முன்னர் பாடசாலை விடுமுறை அறிவிக்கப்பட்டு அது நடைமுறையில் உள்ளது. அவ்விடுமுறைக்கு முன்னதாக குறித்த ஒரு பாடசாலையில் பரீட்சை நடைபெற்றிருக்கின்றது. அம்மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டு, அது சம்மந்தமாகச் 'சில கேள்விகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் ஒரு கேள்வி: "கொரோனா வைரஸ்சிடம் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள என்ன தேவை?" என்பதாகும். அதற்குப் விடையாகப், 'பெற்றோல்' என ஒரு மாணவன் எழுதியிருக்கின்றான். தொடர்ந்து இரண்டாவது கேள்வியாக, "கொரோனா வைரஸ்சிடம் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள என்ன செய்வீர்கள்?" எனக் கேட்டதற்கு அவன், "பெரிய கலனில் பொற்றோலை வாங்கி வைத்திருக்கவேண்டும்!' என எழுதியிருக்கின்றான். இது எடுத்து வைத்து சொல்லப்பட்ட கதையல்ல,

(தொடர்ச்சி 11ம் பக்கம்)



# சமகாலத் துன்பியலில் ஓர் ஆன்மீகத் தேடல்

**சோதனை மேல் சோதனை**
**போதுமடா சாமி**
**வேதனைதான் வாழ்க்கையென்றால்**
**தாங்காது பூமி**

என்ற கவிஞனொருவரின் வரிகளோடு அறிமுகமாகி, துன்பத் தீப்பிழம்புகளோடு பயணித்துக் கொண்டிருக்கும் நமது மக்களைச் சந்திக்க விழைகிறேன்.

துன்பியலையும் கிறிஸ்தவத்தையும் துண்டுபடுத்திப் பார்க்க முடியாது. கிறிஸ்தவம் துன்பியலுக்கு அர்த்தத்தைக் கொடுத்து அண்ணார்ந்து பார்க்க வைக்கிறது. ஓடிக்கொண்டேயிருக்கும் மனிதனுக்கு நில் - நிதானி - செல் என்று பணிப்பது துன்பியல். சுய அழிவை நோக்கி வாழ்க்கைப் பயணத்தை நகர்த்திக் கொண்டிருக்கும் மானுடத்தை சுய விமர்சனம் செய்யப் பணிப்பது துன்பியல். எனவே, துன்பியல் எம்மை உள்நோக்கிப் பார்க்க, இதய சுத்தியுடனான தேடலைத் தொடர வழிவகுக்கின்றது.

இவ்வருடம் எமது தபக்காலப் பயணத்தை கொவிட் - 19 என்னும் கொள்ளை நோயிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. எமது தபக்காலம் இந்த கொள்ளை நோயென்னும் நெருக்கீட்டை எதிர்கொள்ள எமக்கு ஒரு புதிய பார்வையைக் கொடுக்க வேண்டும், புதிய வாழ்வைக் கொடுத்து இறைவன் சொல்லும் செய்திக்கு செவிமடுக்கச் செய்ய வேண்டும். 2020 ஆம் ஆண்டு தபக்காலம் கொரோனாவோடு நினைத்துப் பார்க்கச் செய்கிறது. இதை வார்த்தையின் அடிப்படையில் கீழ்வரும் மூன்று சிந்தனைகளும் எமது தனிப்பட்ட சிந்தனைகளைத் தூண்டி, எமது ஆன்மீக வாழ்வுக்கு ஒரு நுண்நோக்கைக் கொடுக்குமென நம்புகிறோம்.

1. இந்நாட்களில் **"உங்கள் கைகளைக் கழவுங்கள்"** என்னும் ஆலோசனை, எச்சரிக்கை அடிக்கடி எமக்குச் சொல்லப்படுகிறது. இந்த சாதாரண ஆலோசனை காத்திரமானதாகக் கொள்ளப்படவேண்டும். மற்ற இரசாயனங்களைவிட சாதாரண தண்ணீர், சவர்க்காரம் அதிக பலனைத் தரும் என்று கூறு வோரும் உண்டு. எப்படியாயினும் "தயவு செய்து கையைக் கழவுங்கள்" என்பது மருத்துவ ஆலோசனை. கை கழுவாமல் இருந்ததற்காக இயேசு பிரச்சினைக்கு உள்ளானதென நற்செய்தி கூறுவது தெரியும் தானே? உண்பதற்கு முன் தன் சீடர்கள் கைகழுவாததை தடை செய்யாதது. இதைச் சொன்னவுடனே நாங்கள் இயேசுவும் சீடர்களும் கைகழுவவில்லை, எனவே, நாங்களும் கைகழுவத் தேவையில்லை என்ற முடிவுக்கு முன்டியடித்து வரக்கூடாது. மாற்கு நற்செய்தியில் இயேசுவின் மனப்பான்மையை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மாற்கு 7:1-13, 7:1-17 வாசிக்கவும். மேலும் 7:8 இல் மனித மரபைப் பின்பற்றிவருகிறவர்கள் என்கிறார் இயேசு. மத் 15 : 5 "நீங்கள் உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் கட்டளையை மீறுவது ஏன்? என்று வினவுகிறார். எனவே, இயேசு கைகழுவுவதை எதிர்க்கவில்லை, கடவுளின் கட்டளைகளை மீறுவதையே கண்டிக்கிறார். இறைவனது கட்டளைகள் எம்மைக் கழுவித் தூய்மைப்படுத்தும்.

இணைச்சட்டம் 8:7-14 வசனம் 11 இல் "ஆண்டவரை மறந்து போகாதபடி கவனமாயிருங்கள். இணைச்சட்டம் 8:3 "கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர் வாழ்கின்றார்". இறை வார்த்தை எம் உணவு; அதை உண்டு, தன்வயமாக்கி, ஆழமாகத் தியானிக்கவேண்டும்.

மாற்கு 7:14- 15 உண்ளேயிருந்து வெளியே வருபவையே உண்மையான நச்சுயிர். உள்ளிருந்து உள்ளத்திலிருந்தும் அனைத்தும் வெளிவருகின்றன. அவற்றை வார்த்தையால் தூய்மையாக்குங்கள். மாற்கு 7:20-23 களவு, கொலை, தீச்செயல், வஞ்சகம் இத் தீமைகள் அனைத்தும் உள்ளிருந்து வெளியே வந்து உள்ளத்தை தீட்டுப்படுத்துகின்றன. லூக்காவோ வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள் உள்ளேயோ நாற்றமடிக்கிறது என்கிறார். நமது கையைக் கழுவும் அதேவேளை இயேசுவின் அறிவுரையையும் மனத்தில் பதிப்போம். கொரோனாவிலிருந்து நம்மைப் பாதுகாக்க மூக்கு, வாய், முகத்தை மூடிக் கையைக் கழுவும் அதே வேளை, நச்சுயிர்களான பொறாமை, கோபம், பரிவற்ற தீர்ப்பு, எதிர்மறையான குறைகூறுதல், இரக்கமின்மை, சுயநலம் போன்றவை பரவாவண்ணம் பொறுப்புடன் செயற்படுவோம்.

மனுக்குலமாக இவ்வகை நச்சுயிர்கள் பரவாவண்ணம் கவனமாயிருப்போம். எமக்குள்ளிருந்து வெளிவரும் நச்சுயிர்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம். கடவுளின் கட்டளைகள் பற்றி நமக்கு ஊட்டமளிக்கும் உணவு அதாவது நம்மைத் தூய்மைப்படுத்தும் இறைவார்த்தை மட்டில் கருத்தாயிருப்போமா?

திருப்பாடல் ஆசிரியரோடு மன்றாடுவோம். தி.பா.51:7 "என்னைக் கழுவியருளும், உறைபனியிலும் வெண்மையாவேன்" யோவா 9:7 "நீர் சீலோவாம் குழத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்" 2 அரசர் 5: 9-10, 14 -15 "யோர்தானில் ஏழுமுறை கழுவும்" வெளிப்புறத்தில் கழுவுவது நமது உள்ளார்ந்த கழுவுதலை நமக்கு உணர்த்தி நிற்கிறது.

ஆக்கம்: அருட்சகோதரி இனிகோ யோவக்கிம் SSA
தமிழாக்கம் : அருட்பணி மா.இறேஜிஸ் இராசநாயகம்

## 2. பிலாத்து கைகழுவுதல்

கொரோனாவிலிருந்து பாதுகாப்பதற்கு பிலாத்து ஒரு முன்னுதாரணம் என்று நம்மில் எவரும் சொல்லமாட்டார்கள். இத் தபக்காலத்தில் நாம் பிலாத்துவைப் பற்றிச் சிந்திக்கின்றோம். இயேசுவில் நான் ஒரு நச்சுயிரையும் காணவில்லை, என்னிலே தான் நச்சுயிர் இருக்கிறது. எனவே என் கைகளைக் கழுவுகிறேன். இயேசுவில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. அவரால் எவ்வித ஆபத்தும் இல்லை என்றார். யோவா 19:4-6 மாற் 15:10-11, மத். 27:18 கூறுகின்றது "அவர்கள் பொறாமையால் தான் இயேசுவை ஒப்படைத்தார்கள்"

மத் . 27:24 கலகமே உருவாகிறது என்பதாலும் தனது மனைவியின் பரிந்துரையாலும் "தண்ணீரை எடுத்து தன் கைகளைக் கழுவினார்" அதாவது அவர் தன்னையே கழுவிக்கொண்டார். அது கழுவுதல் - ஆம் தன் பொறுப்பிலிருந்து தன்னைக் கழுவுதல், இல்லை நழுவுதல். இப்படியாகக் கழுவுவதை நாம் இன்று எதிர்பார்க்கிறோமா? இது கை கழுவுதல் அல்ல: எம் பொறுப்புக்களிலிருந்து நழுவுதல். இது எமது தற்காப்புக்காக மட்டுமல்ல. இப்படிப்பட்ட கழுவுதல்களை இயேசு எதிர்பார்க்கவில்லை. உங்கள் அறைக்குள் நுழைந்து, உள்ளிருந்து கதவுகளைத் தாழிட்டுக் கொள்ளுங்கள் எசா. 26:20, யோவா 20:19.

மாற்கு 7:31-37 காது கேளாதவர் திக்கிப் பேசுபவரும் நலம் பெற இயேசு என்ன செய்தார்? தம் விரல்களை அது காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார். இன்று இப்படிச் செய்பவர் கைது செய்யப்படுவார். மாற் 8:22-26 இயேசு என்ன செய்தார்? 23 ஆம் வசனம் "அவருடைய விழிகளில் உமிழ்ந்து" யோவா 9:6 அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச் சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி" என்று கூறுகிறது. இயேசுவின் கரங்கள் அழுக்காகின. இதே கரங்கள் தான் 4000, 5000 பேருக்கு உணவளித்த கரங்கள்.

இப்பொழுது நிலவும் நெருக்கீடு மற்றவர் பற்றி அக்கறையற்று இருப்பதற்கானது ஒன்றல்ல. ஏழைகளையும், நோயுற்றோரையும் மறந்து எங்கள் இல்லங்களில் எம்மைப் பூட்டிவைத்துக் கொண்டிருப்பதல்ல. நாம் பொறுப்புடன் செயற்படவேண்டும். எம்மைக் கழுவிக் கொள்ள பிலாத்து செய்தது போல் அல்ல, எமக்குள்ளே இருந்து இன்று நடக்கும் மெய்மையை நன்கு பார்ப்பதற்காக எமது பார்வையை, தொலைநோக்கை கழுவ வேண்டும். எம் கண்களில் பூச இயேசு வேண்டும். இயேசுவின் உமிழ்நீர் எம் கண்களில் படவேண்டும். இயேசு எத்தனையோ நச்சுயிர் கொண்டவர்களைத் தொட்டுக் குணப்படுத்தினார். இயேசுவைப் போன்று மற்றவர்கள் வாழவேண்டும் என்பதற்காக எமது கண்கள், கரங்களைக் கழுவுவோம். உலகளாவிய இக்கொள்ளை நோய் பிலாத்துவைப் போன்று பொறுப்பற்றவர்களாய் கைகழுவாமலிருக்க எம் கண்களைக் குருடாக்காதிருக்கட்டும்.

## 3. கொரோனா என்பது முடி அல்லது முடிசூட்டுதல் எனப் பொருள்படும் ஆங்கிலப் பதத்திலிருந்து வருகிறது.

முள்முடி யோவா 19:2-3 முன்முடியும் செந்நிறப் போர்வையும் - அவரை எள்ளி நகையாடினார்கள்! அவர் அரசர் போன்றா காட்சியளிக்கிறார்? உடல் வேதனைக்கு மேலாக உள வேதனை. தாம் செய்வதென்னவென்று வீரருக்கு விளங்கவில்லை. 1கொரி. 1:23 "நாங்கள் சிலுவையில் அறைபட்ட கிறிஸ்துவைப் பறைசாற்றுகிறோம். இன்று மனிதன் ஏனைய கோள்களுக்குச் சென்றுள்ளான். நாம் படைத்தவருக்கு நிகர் என்று மார் தட்டுகிறான். ஆனால் இந்த அற்ப, நுண் நச்சுயிர் நம்மைத் தாழ்த்தக் கற்றுக்கொடுத்து விட்டது. ஏன் வல்லரசுகளுக்கே கற்பித்துவிட்டது. மற்றவர்கள் எம் சகோதர சகோதரிகள்; அவர்களை ஏளனமாகப் பார்க்கக்கூடாது என கற்பித்துவிட்டது. இக்கொள்ளை நோய் எம் அனைவரையும் சமன்படுத்திவிட்டது. அனைவரும் கைகோர்த்து இயேசுவின் முடியிடம் சேரவேண்டும். இயேசு சொன்னதுபோல "உமது கரங்களில் என்னைக் கையளிக்கிறேன்". வல்லமையும் தூய்மையும் நிறைந்த கரங்களில் எம்மைக் கையளிப்போம். இந்த ஆச்சரியமான கொள்ளை நோயான கொரோனா நேரத்தில் இறைவனிடத்தில் எம்மைக் கையளிப்போம். இறைவனின் அன்புக் கரங்களில் எம்மைக் கையளிப்போம் என்று ஒருவருக்கொருவர் சொல்லுவோம்.

**அ.** எமது கரங்களைக் கழுவுவோம், இல்லை இறைவன் எம்மை உள்ளார்ந்த விதமாகக் கழுவி வேண்டாதவை அனைத்திலிருந்தும் எம் உள்ளத்தைத் தூய்மையாக்க இடமளிப்போம்.

**ஆ.** பிலாத்துவைப் போலன்றி - பாராமுகமாயிராமல், சுயநலமற்று இருப்போம். மற்றவர்கள் மட்டில் நமக்குப் பொறுப்பு உண்டு. குறிப்பாக ஏழ்மை, துன்பம், மன அழுத்தம், குறிக்கோளற்ற வாழ்வு, வாழ்வோர் மட்டில் நாம் பொறுப்பேற்போம். அவர்கள் எமது சகோதர சகோதரிகள். அதே வேளை எமது குடும்பம், குழுமத்தில் உள்ளோருடன் அன்புறவை ஏற்படுத்துவோம். அவர்களுடன் எமது நேரத்தைச் செலவிட்டு அவர்கள் சொல்லாமல் சொல்பவற்றுக்கு உற்று செவிமடுப்போம், உண்மைக் குடும்பங்களாவோம்.

**இ.** இறுதியாக, இயேசுவின் முள்முடி - துன்பத்தின் கொடுமுடி, கொரோனா எம்மை ஒரு மகிமைக்கு இட்டுச் செல்லும் என உள்ளூர நம்புவோம். நம் அன்னை அனைவரின் அரசி, இவ் இக்கட்டான நேரத்தில் மனித நிலையில் நம்பிக்கையற்ற நேரத்தில் இறைவனிடத்தில் நமக்காக இறைஞ்ச இரு கரம் கூப்பி மன்றாடுவோம்.

# இறை நம்பிக்கை இன்றைய சூழலில் அர்த்தமற்று போகின்றதா?



அருட்தந்தை சியான்ஸ்ரன் ஜெனிஸ், அமதி

**கொ**ரோனா தொற்று நோயினால் ஊரே, ஏன் உலகமே அடங்கிப்போன காலத்தை நானும் நீங்களும் நன்றாக அனுபவித்து இருக்கின்றோம். அவ்வாறான ஒரு காலகட்டத்தில் சில சமூகவலைத்தளத்தில் மிகவும் பயனுள்ள சிந்திக்க வைக்கும் பதிவுகளை வாசித்தேன். அவற்றில் ஒன்று "செவ்வாயில் கால் வைப்போம் எண்டு சொன்னவங்க எல்லோரும் பக்கத்து வீட்டிற்கே ஒரு அடி எடுத்து வைக்க முடியல"

உண்மைதான். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எமது ஆன்மீக வாழ்வும், எம் உடல் ஆரோக்கிய வாழ்வும் முழுமையாக எமது கைகளில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கோயில்கள் மூடப்பட்டன. திருப்பலிகளுக்கு செல்லமுடியாத நிலை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எம் விசுவாசம் எந்தளவுக்கு எங்களுடைய வாழ்வுக்கு அர்த்தமாக அமைகிறது? என்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

திருப்பலிகள் இல்லை ஆனால் நாம் வாழ்ந்தோம்தானே. கொரோனா தொற்று நோயின் போது ஆன்மீகம் தேவையில்லை உடல் ஆரோக்கியம்தானே தேவையாக இருந்தது. திருவருட்சாதனங்கள் தேவையில்லை ஆனால் நோய் எதிர்ப்பு சக்திதானே அத்தியாவசியமாக இருந்தது. ஆன்மீக ஊட்டம் தரும் உணவு தேவை இல்லை. உடலுக்கு உரிய சக்தியைத் தரக்கூடிய உணவு வகைகளைத் தானே தேடி அலைந்து வாங்கினோம். அப்படியென்றால் எங்களுடைய விசுவாசம் எங்களுடைய வாழ்வுக்கு எந்த வகையில் உதவுகின்றது என்று கேள்வி கேட்பது எமது மன அங்கலாய்ப்புக்களுக்குத் தெளிவு கிடைக்கும் என நம்புகிறேன்.

கடவுள் எங்களுக்குத் தேவைதானா? நாங்கள் வேலை செய்தால் தானே பணம். அந்தப் பணத்தின் மூலம் எங்களுடைய தேவைகள் நிறைவேறுகின்றன. யோகாசனம், உடற்பயிற்சி செய்தால் உடம்பு வலிமை பெறுகின்றது. மனம் ஆறுதல் அடைகின்றது. நரம்புகள் உறுதியடைகின்றன. அந்த வகையில் நாங்கள் உழைத்தால் தான் எங்களுக்குச் சோறு. வேறு யாரும் வந்து ஊட்டமாட்டார்கள் என்பது எங்களுடைய் வாழ்க்கைத் தத்துவமாக இருக்கின்றது. எனவே ஒன்றை செய்வதன் மூலம் அதன் பலனை உடனே அல்லது குறுகிய காலத்தில் அனுபவிக்கிறோம். அந்த வகையில் எமக்கு விடுதலையும், ஆறுதலும் கிடைக்கின்றது, எமது தேவைகள் நிறைவு காண்கின்றன.

இந்த "விடுதலை" பற்றித்தான் எல்லா மதங்களும் பேசுகின்றன. சமூகக் கட்டமைப்புக்களோ, போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ, ஆன்மீகப் போதனைகளோ எல்லாமே மனித விடுதலையை மையப்படுத்தியதாகத்தான் இருக்கின்றது. இருக்க வேண்டும். அந்த வகையில் எங்களுடைய நாட்டில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் ஒரு மனித உரிமைக்கான, விடுதலைக்கான ஒரு போராட்டமாக இருந்தது. மேலும் நாங்கள் செய்திகளில் வாசிக்கும் போராட்டங்கள் எல்லாம் ஒரு விடுதலையை, மனித மேம்பாட்டை நோக்கியதாக இருக்கின்றது.

சம்பள உயர்வுக்கான போராட்டம், நீதிக்கான போராட்டம் என்று எல்லாமே ஒரு மனித விடுதலையை நோக்கியே இருக்கின்றன. இவ்வாறான ஒரு விடுதலையைத்தான் மதங்களும் அடிப்படையாக கொண்டிருக்கின்றன. இதை மையப்படுத்தி சில கிறிஸ்தவ அடிப்படைவாத சபைகளும் "விடுதலைப் பெருவிழா" 'எழுப்புதல் செபவழிபாடு,"குணமாக்கும் வழிபாடு' என விடுதலையை நோக்கிய செபவழிபாடுகளை முன்னெடுக்கின்றன.

அந்தவகையில் இந்துமதம் "முத்தி" என்றும், புத்த சமயம் 'நிர்வாணம்' என்றும், கிறிஸ்தவ சமயம் 'மீட்பு,"கடவுளுக்கு ஏற்புடமையாகுதல், முடிவில்லா வாழ்வு, விண்ணகம்' என்றும் போதிக்கின்றன. ஆனால் இப் போதனைகள் எந்தளவுக்கு யதார்த்தமாக இருக்கின்றன? எந்தளவுக்கு மனித வாழ்வுக்கு உதவுகின்றன? கொரோனா தொற்று நோய் காலத்தில் எம் மதம் அல்லது எம் விசுவாசம் எந்தளவு எங்களுக்கு உதவிசெய்தன, மருத்துவம் தானே எமக்குக் கடவுளாக இருந்தது. இவ்வாறு பல கேள்விகள் எம் உள்ளத்தில் எழுந்தன. உங்களில் எழுந்திருக்கலாம். அந்தவகையில் எமது விசுவாசம் அர்த்தமற்றுப் போகின்றதா? எம் விசுவாசம் எம் நாளாந்த மனித வாழ்வுக்கு அப்பாற்பட்டதா? எம் விசுவாசம் ஒரு கோட்பாடா? இவ்வாறான கேள்விகளுக்கு மத்தியில் எமக்கு விசுவாசம் தேவையா? என்ற கேள்வி கேட்பது சரியாக இருக்கும். சில வேளைகளில் நாம் அன்றாடம் பார்க்கும் நிகழ்வுகள் எமக்கு சவாலாக இருக்கும்.

"பாதர் எங்கட ஊரில ஒரு குடும்பம் இருக்கு". அவங்க கோயிலுக்கு வாரதும் இல்லை , பூசைக்கு வாரதும் இல்லை". ஆனால் நல்லா இருக்கிறாங்கள்" ஆனால் நாங்கள் ஒரே கோயிலும் பூசையுமா இருக்கிறோம் எங்களுக்குத் தான் எல்லா வருத்தமும் சோதனையும் வருது"

### வேறு ஒரு உதாரணம்:

"எனக்கு கடவுளில் நம்பிக்கை இல்லை. ஆனால் நான் நல்லாத்தான் இருக்கிறேன். கஸ்ரப்படுறவங்களுக்கு உதவிசெய்கிறேன். நல்ல ஆரோக்கியமாகக் குடும்பத்தோடு சந்தோசமாக இருகிறேன். என்னத்துக்கு கோவில் பூசை எண்டு காலத்தை க் கடத்துவான்."

இவ்வாறான பேச்சுக்களை நாங்கள் நிறையக் கேட்டிருப்போம். 'அப்போ விசுவாசம் எங்களுக்கு என்னத்துக்கு தேவை?" கடவுளில் நம்பிக்கை வைத்து வாழ்வோருக்கும் நம்பிக்கையற்று வாழ்வோருக்கும் என்ன வித்தியாசம்? எப்படியும் வாழ முடியுமா?' என்ற கேள்விகளைத் தொடுத்து எனது சிந்தனையை எழுத விரும்புகின்றேன்.

கொரோனா தொற்றுநோயின்போது நாங்கள் எல்லோரும் எங்களுடைய வீட்டிலேயே முடக்கப்பட்டிருந்தோம். நாட்கள் செல்லச் செல்ல வீட்டில் இருப்பது எமக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. பாரிய மன உளைச்சல், எங்களது நண்பர்களை, உறவுகளை பிரிந்து நின்றோம். எமக்கு நட்புகளும், உறவுகளும்தான் முக்கியம் என்று உணர்ந்து கொண்டோம். எங்களுக்கு எல்லாம் இருக்கு என்றால் என் குடும்பம், என் பொருட்கள் என்று சந்தோசமாக இருந்திருக்கலாம் தானே. அந்த நேரத்தில் நாங்கள் என்னத்தைத் தொலைத்தோம் என்று நினைத்தால் வேறு ஒன்றும் இல்லை உறவு என்று சொன்னால் அந்த உண்மையை மறுக்க முடியாது.

"என்ன வாழ்க்கை இது சீ...சீ.. எத்தனை நாட்கள்தான் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது".. ஐயோ கடவுளே எப்பதான் முடியுமோ? இப்படியே போனால் பைத்தியம் தான் பிடிக்கும் போல"

எமக்கு உறவுதான் முக்கியம். உறவு இல்லாவிட்டால் எங்களுக்கு பைத்தியம் பிடிச்சிடும் என்று இந்த ஊரடங்கு நமக்கு நன்றாக கற்பித்து இருக்கின்றது. எனவே மனித வாழ்வு உறவு சம்மந்தப்பட்டது. ஒரு தனி மனிதனாக நாம் வாழமுடியாது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. இதனைத்தான் திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம். "ஆண்டவராகிய கடவுள் மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று: அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். எம் மனித வாழ்வு உறவினால்த்தான் அர்த்தம் பெறுகின்றது. இந்த உறவு எம் நலம் சார்ந்தது மட்டுமல்ல மாறாக சமூகம் சம்மந்தப்பட்டது. இதனைத்தான் மத்தேயு நற்செய்தியில் (25:31-46) வாசிக்கின்றோம். "நான் பசியாக இருந்தேன் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்: அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்". (மத்25:35) இவற்றை எல்லாம் எப்போது செய்தோம் என்று மக்கள் கூட்டத்தினர் கேட்கும்போது இயேசு கூறுகிறார்.

"மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 25:40).

இவ்வாறான ஒரு வாழ்வுதான் எமக்குத் தேவையாக இருக்கின்றது. இதனைத்தான் எமது விசுவாசமும் சொல்கிறது. கிறிஸ்தவ வாழ்வு என்றால் என்ன? அது வேறு ஒன்றும் இல்லை மாறாக அன்பில் கட்டப்பட்ட ஒரு உறவு. அன்பு இல்லையேல் கிறிஸ்தவம் இல்லை. கிறிஸ்தவம் இல்லையேல் நல்ல உறவு இல்லை. நல்ல உறவு இல்லையேல் எமது மனித வாழ்வு அர்த்தமற்றுப் போகும். எனவே இதிலிருந்து எமக்குத் தெளிவாகப் புரியும் அதாவது எம் விசுவாசம் எமது வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கின்றது. எம் வாழ்வை நல்லமுறையில் வாழ உதவி செய்கின்றது. எமக்கு உண்மையான மன சந்தோசத்தையும் நிம்மதியையும் எம் நம்பிக்கை பெற்றுத் தருகிறது.

கிறிஸ்தவம் இல்லையேல் நல்ல உறவு இல்லையா? அது எப்படிச் சொல்ல முடியும் என்று கேள்வி கேட்க முடியும். நாங்கள் எல்லோரும் உதவி செய்கின்றோம். அதனைக் கடவுளில் நம்பிக்கை உள்ளவரும் செய்வார் நம்பிக்கை அற்றவரும் செய்வார். உதவிசெய்வதன் மூலம் நாங்கள் நல்ல உறவைப பேணுகின்றோம். எம் மனதுக்கு திருப்தியாக இருக்கின்றது என்று வாதாட முடியும். இங்கே "பிறர்மேல்காட்டும்அன்பின் இயல்பு"வேறுபடுகின்றது. அது எவ்வாறு என்றால் கடவுள்மேல் நம்பிக்கையற்றவர் தனது மனத் திருப்திக்காக மற்றவர்களுக்கு உதவி செய்வார். அதனால் அந்த அன்பில் சுயநலம் இருக்கின்றது. " நான் எனது சந்தோசம்" என்ற அடிப்படையில் உதவி செய்வார். ஆனால் கடவுள் நம்பிக்கை உள்ளவர் இந்த சுயநலத்தை தாண்டி உதவி செய்கிறார். இங்கேதான் எம் விசுவாசம் பெரும்பங்கு வகிக்கிறது. அது எவ்வாறெனில் எம் விசுவாசம் இந்த சுயநலத்தைத்தாண்டிஒருபரந்தநோக்கில் எம் கரங்களை நீட்ட உதவிசெய்கின்றது. ஏன் என்றால், நாங்கள் நம்பும் கடவுள் அன்பையே தன் இயல்பாகக் கொண்டவர். கடவுள் என்ற தனது நிலையில் இருந்து எம்மைத் தேடிவந்து எமது மனித இயல்பில் பிறந்து எமக்காகத் துன்பங்கள் பட்டு எமக்காக இறந்தார். இந்த அன்பு எல்லைகளைக் கடந்தது. ஒரு தனி இனமோ, மதமோ கடந்த அன்பு. ஆனால் ஒரே ஒரு குலம்தான் அது மனிதகுலம். அந்தவகையில் இந்தக் கடவுளில் நம்பிக்கை வைக்கும் போது நாம் ஒவ்வொரு மனிதரையும் நாம் நம்பும் கடவுளின் சாயலாகப் பார்க்கின்றோம். இவ்வாறு சிந்திக்கும் போது எமது மனித வாழ்வு அர்த்தம் பெறுகின்றது. ஏன் என்றால் கடவுள் எமது மனித இயல்பைப் பற்றிக்கொண்டார். அவர் கடவுள் நிலையில் இருந்து எம்மைப்போல வாழ்ந்தார். இவ்வாறு நாம் இருக்கும்போது நிச்சயமாக சக மனிதரை மதிப்போம். மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்போம். ஒட்டுமொத்தத்தில் மனித உறவு அற்புதமாக இருக்கும்". இந்த உறவின் முக்கியத்தை. கொரோனா தொற்றின்போது இருந்த ஊரடங்கு எமக்கு உணர்த்தியிருக்கின்றது. அந்த வகையில் எம் விசுவாசம் எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கின்றது.

எம் வாழ்வின் மகத்துவத்தை நன்றாக உணர்த்துகின்றது. எனவே இந்த விசுவாசம் ஒரு பொருள் அல்ல அல்லது நாம் கேட்டவுடன் கிடைக்கச்செய்யும் இயந்திரம் அல்ல. மாறாக இறைவனால் எமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கொடை. எம் கடவுளை அறிந்துகொள்ள அவரால் அருளப்பட்ட ஒரு அருளாகும்.

"ஏன் கடவுளை விசுவசிப்பவர்கள் எல்லாரும் நீதிமான்களாகத்தானே இருக்கினம். அவையின்ர வாழ்க்கையை விட கடவுளை நம்பாத என்னுடைய வாழ்க்கை எவ்வளவோ நல்லம்" என்று எண்ணி கடவுளை ஏற்க மறுத்தால் அது எமது அலட்சியப்போக்கு. ஏன் என்றால் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லோரும் மனிதர்கள். அவர்கள் தவறு செய்யக் கூடியவர்கள். ஆனால் அந்தத் தவறுகளையெல்லாம் திருத்தி வாழுவதற்கான சக்தியையும் கடவுள்தானே தரவேண்டும் என்று நாம் அவரிடம் முழுமையாகச் சரணடைய வேண்டும். எனவே

இங்குவிசுவாசம் என்று சொல்லும் போது ஒரு புதுமையைக் கண்டவுடன் கடவுளை விசுவசிக்கும் ஒரு உணர்ச்சி சம்மந்தப்பட்டது அல்ல மாறாக அறிவியல் ரீதியானதும், எம் முழு சுதந்திரத்துடனும் முழு அறிவோடும் நாம் எடுக்கும் ஒரு தீர்மானமாகும்.

இந்த விசுவாசம் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுப்பது மட்டுமல்ல மாறாக எதிர்நோக்கையும் எமக்குத் தருகிறது. இவ்வுலக வாழ்க்கை மட்டுமல்ல மறு-வுலக வாழ்வு பற்றிய எதிர்நோக்கைத் தருகின்றது. கத்தோலிக்க மக்களாக நாம் அறிக்கையிடும் நம் நம்பிக்கை அறிக்கையினுடைய பொருளை நன்றாக அறிந்து நாம் சொல்லும்போது எம் விசுவாசம் எம் மனித வாழ்வோடு எவ்வாறாக பின்னிப்பிணைந்து வாழ்வின் அர்த்தத்தைக் கொடுக்கின்றது என்று ஆழமாக அறிய முடியும். எனவே எம் விசுவாசம் ஒருபரம இரகசியம்என்றுசொல்லியோ, வாழ்வுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் என்றோ நாம் நினைத்தால் அது எமது அறியாமையின் வெளிப்பாடு எமது மூடத்தனம். கடவுளில் நம்பிக்கை கொள்வது ஏளனத்துக்குரியது என்று நினைத்தால் நாமும் அவமானத்துக்கு உள்ளாகுவோம்.

## கொரோனா முடிவு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த சம்பவம்! ஆக, பெற்றோர்களான - பெரியவர்களான நமது நடத்தையை, நடவடிக்கைகளை, செயற்பாடுகளைக் குறித்து நமது இளம் சிறார்களின் அவதானிப்புத்தான் மேற்சொன்ன மாணவனின் பதில்!

**வீடு பற்றியெரியும்போது பீடி பற்றுபவர்கள்!**

கொரோனாவின் பரம்பலைக் குறைப்பதற்கும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் முக்கியமான வழியாக சில சுகாதார வழிமுறைகளோடு வீட்டில் இருப்பது முக்கியமானது என்பது முன்மொழியப்பட்டுள்ளது. ஆகவே, மக்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய முற்பட்டபோது கடைகளில் நிறையப் பொருட்கள் இருந்தும் செயற்கைத் தட்டுப்பாட்டினை உள்ளூர் வியாபாரிகள் உருவாக்கியதையும் பொருட்களுக்கான விலைகளை அதிகரித்ததையும் அவதானிக்கலாம். இதேபோலத்தான், புலம்பெயர் நாடுகளிலும் 'சுப்பர் மாக்கற்' எனச் சொல்லப்படுகின்ற பெரிய கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடாக இருப்பினும் அந்நாடுகளைச் சார்ந்தவர்கள் பொருட்களுக்கான விலைகளை அதிகரிக்கவில்லை. அதேவேளை பொருட்கள் வந்ததும் பழைய விலையிலேயே விற்றிருக்கின்றார்கள். ஆனால், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலம்பெயர் நாடுகளிலுள்ள 'தமிழ் கடைகள்' கொள்ளை இலாபம் ஈட்டிவருவது பெரும்வெட்கத்திற்குரியது என்று சில புலம்பெயர் நண்பர்கள் குறிப்பிடுகின்றார்கள். வீடுபற்றியெரியும் போது, பொறு, என் பீடியைப் பற்ற வைத்துக் கொள்கிறேன்! என்ற மனப்பாங்கு நம்மவரிடமிருந்து இத்தனை ஆண்டு போர்க்காலத்தின் பின்னரும் மறையவில்லை என்பது கவலைக்குரியது! இவ்வாறான மனப்பாங்கிலிருந்து நாம் கட்டாயமாக மாற்றம் காணவேண்டும்.

**கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய காலம்!**

இன்றைய உலகில் நாம் எல்லோருமே சரியான 'பிசி' (busy) யாகி விட்டோம். உன்னையும் என்னையும் முழு உலகத்தையே முடக்கவல்லவர் கடவுள் என்பதை கொரோனா நிரூபித்திருக்கின்றது! கடவுளுக்குக் கொடுக்கவேண்டிய நேரத்தை நாம் கொடுக்க மறந்திருக்கின்றோம் என்பதை கொரோனா நினைவூட்டியிருக்கின்றது. கடவுளுக்குக் கொடுக்கவேண்டியதைக் கடவுளுக்கும் மனிதருக்குக் கொடுக்கவேண்டியதை மனிதருக்கும் கொடுக்க இக்'கொரோனாக் காலம்' நம்மை அழைக்கின்றது. இன்று, மத நம்பிக்கைகளுக்கா செவிமடுக்கின்றோம்? இல்லையே! மத நம்பிக்கைகளைப் பார்க்கிலும் மத உணர்வுகளுக்கு இடம்கொடுத்து அம் மத உணர்வுகளுக்கு மேலும் மதம் பிடிக்கவைத்துவிடுகின்றோம்! இதனையும் ஒரு வைரசாக்கிப் பரப்ப நிற்பவர்கள் நம்மிடையேஇருக்கத்தான்செய்கின்றார்கள்! சமயங்கள் கூறும் உட்பொருளை சிந்திக்க நல்ல நூல்களைப் படித்துஉண்மைஅறிவையுடைய, ஆன்மீகத்தில் வளர இக்காலம் அழைப்பு விடுக்கின்றது. உண்மையில் ஆன்மீகம் வேறு, சமயம் வேறு. ஆன்மீகம் ஒரு சமயம் சார்ந்தது அல்ல. சமயம் ஆன்மீகத்திற்கு அழைத்துச் செல்ல முடியும். ஆனால், சமயக் கிரிகைகள் - வழிபாடுகள்தான் ஆன்மீகம் என்ற மனப்பாங்கு உண்மை அறிவை அடைய, இறை ஞானத்தைப் பெறத் தடையாகவே அமையும்!

## நற்கருணை இயேசுவில் வாழ்வு பெற்றோம்.

மார்க்கம், கனடாவில் வசிக்கும் பிரான்சிஸ் சேவியர் ஆகிய நான் எனது சிறு வயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் மிகுந்த கஸ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தோம்.

எம்தாய் வழியாக நற்கருணை இயேசுவில் நாம் கொண்ட நம்பிக்கை வாழ்வு வழியாகவும் அன்னை மரியாவின் பரிந்துரை வழியாகவும், நானும் எனது சகோதர சகோதரிகளும் மிகவும் நல்ல நிலையில் வெளிநாடுகளில் வாழ்கின்றோம்.

எமது துயரத்தில் கரம்பிடித்து வாழ்வு தந்த நற்கருணை இயேசுவிற்கும் எமது தேவைகளில் பரிந்துரைக்கும் அன்னை மரியாவுக்கும் நன்றியாகவும் சாட்சியமாகவும் இதைப் பிரசுரிக்கின்றேன்.

கி. பி. சேவியர்
மார்க்கம்,
கனடா.


### 31ம் நாள் நினைவு தினம்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 | 11 |
| 04 | 05 |
| 1950 | 2020 |

அமரர்
**தேவசகாயம் சந்தியோகு வில்சன்**

"நேர்மையான வழிமுறையைப் பின்பற்றுவோர் தம் இறுதிப் படுக்கைகளில் இளைப்பாறுகின்றனர்"
எசாயா 57 : 2

விண்ணகத் தந்தையே இறைவா!
மண்ணுலக வாழ்வினை நிறைவு செய்து உம் பேரின்ப வீட்டில் இளைப்பாற வந்திருக்கும் உம் அடியானாகிய தேவசகாயம் **சந்தியோகு வில்சன்** பேரில் உமது கருணைக் கண்களைத் திருப்பியருளும். இவ்வுலக வாழ்வில் இவர் செய்த நன்மைத் தனங்களைக் கருத்திற்கொண்டு குற்றம் குறைகளை மன்னித்து உம்மைத் துதிக்கும் பாக்கியத்தை இவருக்கு அருள்வீராக.

AD 27

முகமாலை,
பளை.

என்றும் நினைவில் கலந்திருக்கும்
குடும்பத்தினர்.



### நீங்கா நினைவில் 1ம் ஆண்டு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 | 26 |
| 06 | 03 |
| 1942 | 2019 |

அமரர்
**திருமதி. மரியா மின்னொளி ஜீலியன்**
(லூர்த்துமலர்)

AD 24

எம்மோடு வாழ்ந்து இப்பூவுலக வாழ்வைத்துறந்து மறுவுலக வாழ்வைத் தேடிச்சென்று ஓராண்டு நிறைவினிலே உங்களைப் பிரிந்த துயரத்தின் அதிர்வுகள் நெஞ்சின் அலைகளாக ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. எனக்கு நல்ல துணைவியாய் பிள்ளைகளுக்கு நல்ல அன்னையாய் இருந்து அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும் வழங்கினாய், புன்சிரிப்பால் எம்மைக் கவர்ந்தாய். ஆன்மீகம் செழிக்க உதவினாய், அதனால் எம்மோடு வாழ்கின்றாய். உங்களை நாம் மறவோம் அம்மா. உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதானத்தில் நித்தியசாந்தி அடைவதாக.

819, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9752 / 077 749 8865

உங்கள் பிரிவால் நினைந்துருகும்
அன்புக்கணவன், பாசமுள்ள பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



### 10ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 01 |
| 03 | 04 |
| 1937 | 2010 |

அமரர்
**திருமதி. மேரி யோசவின் பாக்கியநாதர்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11 : 25)

அன்புடன் நினைவுகூரும்


கணவர் : அ.பாக்கியநாதர்
பிள்ளைகள் : றெஜி, றெகான், றதீஸ்குமார்
மருமக்கள் : நிஜிதா, வதனி, தயாளினி
பேரப்பிள்ளைகள் : மேரிறியாங்கி, ஜெறோம், ஆன்செறன், ஆன்ஷிரோணி மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.

AD 23

"மரியன்ஸ்" கல்லூரி வீதி,
மானிப்பாய்.



### விண்ணக வாழ்வின் 6ம் வருட நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 | 28 |
| 02 | 03 |
| 1928 | 2014 |

அமரர்
**திருமதி.அந்தோனி பர்னாந்து செலீனம்மா**

"ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்"
(தி.பா. 27:4.)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வில் வழிகாட்டியாய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அம்மாவே நீர்
இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்

AD 26

5ம் வட்டாரம்
மண்டைதீவு

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்



### விண்ணக வாழ்வின் 4ம் மாத நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 24 | 22 |
| 08 | 02 |
| 1959 | 2020 |

அமரர்
**ஷிவோன் நளினி றவீந்திரன்**

மண்ணில் மனிதமாகி! மாந்தருள் தெய்வமாகி!
தொடமுடியாத தூரம் சென்று விட்டீர்களே...
உம் சேவைகள் இவ்வுலகில் முடியும் முன்னே - இறைவன்
தன்னருகே அழைத்துப் புதிர் போட்டதேனோ? ...
நிஜங்களில் உம்மோடு வாழ்ந்த நினைவழியா நாட்களை
சுமந்தபடி வாழ்வோம் - நாம் சுவாசிக்கும் வரை

AD 25

இல.7. அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# குருத்துவத் திருநிலைப்படுத்தல்

இறைவனின் திருவருளால் இவ்வாண்டு யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு திருத்தொண்டர்களும் எதிர்வரும் 27ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களாகிய **சூ.எட்வின் நரேஷ், பிரான்சிஸ் றீசன் நிதர்சன் , ஜே.அலிஸ்ரன் நியூமன், ஜோ.ஜோண்குருஸ்** ஆகியோரே யாழ். ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக் குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் ஜே.அலிஸ்ரன் நியூமன்** அவர்கள் குருநகர் பங்கின் புனித யாகப்பர் ஆலயத் திருஅவையைச் சேர்ந்தவர். திரு.திருமதி.ஜேம்ஸ் அரியநாயகம் திரேசம்மா தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக் கல்வியை மண்டபம் (தமிழ்நாடு) அரசினர் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை சுந்தரநடப்பு (தமிழ்நாடு) கருணாலயா பாடசாலையிலும் (தமிழ்நாடு), ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் ஜோ.ஜோண்குருஸ்** அவர்கள் உரும்பிராய்ப் பங்கின் புனித மிக்கேல் ஆலயத் திருஅவையைச் சேர்ந்தவர். திரு.திருமதி ஜோன்கபாஸ் லூர்துமலர் தம்பதிகளின் மகனான இவர், தனது ஆரம்ப நிலைக்கல்வியை மல்லாவி, ஒட்டங்குளம் ஆரம்ப பாடசாலையிலும் மற்றும் இடைநிலைக் கல்வியை யாழ். வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ் பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும் மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் பிரான்சிஸ் றீசன் நிதர்சன்** அவர்கள் பெரியவிளான் பங்கின் புனித அந்தோனியார் ஆலயத் திருஅவையைச் சேர்ந்தவர். திரு.திருமதி பிரான்சிஸ் றீசன் மாசில்லாமணி தம்பதிகளின் மகனான இவர், தனது ஆரம்பக் கல்வியை இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர் கல்வியை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியிலும் மற்றும் யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக் கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியை புனித சவேரியார் பெரிய குருமடம் மற்றும் கண்டி தேசியக் குருமடத்திலும், இறையியலை புனித சவேரியார் பெரிய குருமடத்திலும் கற்றுத் தேர்ந்தார்.



**திருத்தொண்டர் சூ.எட்வின் நரேஷ்** அவர்கள் பளைப் பங்கின் புலோப்பளை, புனித இராயப்பர் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு.திருமதி சூசைப்பிள்ளை மேரி யூக்கறிஸ்ரா வசந்தமாலை தம்பதியினரின் மகனான இவர் தனது ஆரம்பக் கல்வியை கிளிநொச்சி புலோப்பளை றோ.க.த.க பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.

இவர் சிறிய குருமடக்கல்வியை புனித மடுத்தீனார் குருமடத்திலும், மெய்யியல் இறையியல் கற்கை நெறிகளை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

புதிய குருக்களை பாதுகாவலன் வாசக நேயர்கள் சார்பில் வாழ்த்தி மகிழ்கின்றோம்

# கொரோனா வைரஸ் தொற்றுக்காலத்தில் ஆலயங்களில் திருப்பலியில்லாத காலத்தில் ஆயர் இல்லத்திலிருந்து ஞாயிறுத்திருப்பலி ஒளிபரப்பு



கொவிட் -19 வைரஸ் தொற்றுக்காலத்தில் ஆலயங்கள் பூட்டப்பட்டு திருப்பலிகள் இல்லாத காலத்தில் யாழ். ஆயர் இல்லத்திலிருந்து ஞாயிறுத்திருப்பலிகள் நேரலையாக காலையில் ஒளிபரப்பப்பட்டன. இத்திருப்பலிகளை யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் முன்னின்று ஒழுங்கு செய்து தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

வழிபாட்டு ஒழுங்குகளையும் பாடல்களையும் அருட்தந்தையர்கள் ஜேம்ஸ், ரெறன்ஸ் அடிகளாரும் திருத்தொண்டர் நிதர்ஷன் அவர்களும் நெறிப்படுத்தினர்.

ஒளிபரப்புப் பணிகளை யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பாடல் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ் ஸ்ரீபன் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார். ஒளிபரப்பு ஸ்தாபனங்களாக டான் ரீவி, கப்பிட்டல் ரீவி, ஹோலி மேரி, இறை ஒளி என்பனவும் சமூகத் தொடர்பாடல் ஆணைக்குழு முகநூல் பக்கமும் நேரடியாகத் திருப்பலிகளை ஒளிபரப்புச் செய்தனர். இவர்களுக்கு யாழ். மறைமாவட்ட இறை மக்கள் சார்பாக நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

## பங்கு மக்களோடு அமைதியாக கொண்டாடப்பட்ட பாஷையூர் புனித அந்தோனியார் திருவிழா



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி கடந்த 13.06.2020 அன்று சனிக்கிழமை மிக அமைதியாக பங்கு மக்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கொண்டாடப்பட்டது.

இத் திருநாள் திருப்பலியை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையேற்று ஒப்புக்கொடுத்து, புனித அந்தோனியாருடைய திருச்சொரூப ஆசீரையும் வழங்கினார்.

கொவிட் - 19 வைரஸ் தொற்றுக் காரணமாக அரசாங்க சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைவாக பாஷையூர் பங்கு மக்கள் மட்டும் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியைப் பேணி இத் திருவிழாத் திருப்பலியில் பக்திபூர்வமாக பங்கெடுத்தனர்.

இத்திருவிழாத் திருப்பலியையும் திரிதின ஆயத்தநாள் வழிபாடுகளையும் பங்குத்தந்தை அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளார் சிறப்புற ஒழுங்கு செய்திருந்தார்.

## அ.ம.திகள் சபையின் புதிய யாழ் மாகாணத் தலைவர் யாழ். ஆயரைச் சந்தித்தார்



அ.ம.தி களின் புதிய மாகாணத் தலைவராகப் பணிப் பொறுப்பேற்கவுள்ள அருட்பணி பெனடிற் இயூஜின் அடிகளார் யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்து ஆயரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டார்.

இச் சந்திப்பில் எதிர்காலப் பணித்திட்டங்கள் பற்றி சுதந்திரமாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

## மறையாசிரியர் பரீட்சைத் தினம் மாற்றம்

தேசிய மறைக்கல்வி ஆணைக் குழுவினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் தேர்வு, மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு, மறையாசிரியர் இறுதித் தேர்வு ஆகிய தேர்வுகள் இவ்வருடம் இடம்பெற இருந்த தினம் மாற்றப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 26ம் திகதி என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தாலும் நாட்டின் நிலைமை காரணமாக பிற்போடப்பட்டு தேர்வுகள் நவம்பர் 21ம் திகதி (சனிக்கிழமை) இடம்பெற உள்ளது என்பதை அறியத் தருகிறோம். ஆகவே விண்ணப்பதாரர்கள், நிரப்பப்பட்ட உங்களின் விண்ணப்பப் படிவங்களை யாழ்.மறைக் கல்வி நிலையத்திற்கு யூலை மாதம் 31ம் திகதிக்கு முன்னர் கையளிக்கவும்.

அருட்பணி X.W. ஜேம்ஸ்

இயக்குனர், யாழ். மறைக்கல்வி நடுநிலையம்,

## வாசகரின் கனிவான கவனத்திற்கு !

கடந்த மார்ச் மாதம் முதல் நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 வைரஸ் தொற்றுக் காரணமாக யாழ். கத்தோலிக்க அச்சகமும் செயலற்று இருந்தமை நீங்கள் அறிந்ததே. இதன் , காரணமாக பாதுகாவலன் பத்திரிகை 08.03.2020ற்குப் பின்னர் வெளிவரவில்லை. இருப்பினும் வாசகர்களின் தேவையை உணர்ந்து நாம் பாதுகாவலன் பத்திரிகை மூன்றினை மின்னிதழ்களாக வெளியிட்டிருந்தோம். எவ்வளவு தூரம் மின்னிதழானது எமது அனைத்து வாசகர்களையும் எட்டியதென்பது கேள்விக்குறியே. இருப்பினும் வாசகர்களின் எண்ணங்களை உணர்ந்து மின்னிதழில் வெளியான முக்கிய சிறப்பான கட்டுரைகளைத் தாங்கி மீண்டும் இவ்வாரம் முதல் பாதுகாவலன் பத்திரிகையை அச்சிட்டு வாசகர் கையில் தவழவிடுகின்றோம். கடந்த மூன்று மாத காலமாகப் பாதுகாவலன் பத்திரிகையை அச்சிட முடியாதமைக்கு மனம் வருந்துகின்றோம்.நன்றி

ஆசிரியர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு யூன் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.